# வாழ்வியல் வள்ளுவம்

1. வல்லுநர் வழி நிற்றல்
2. கருமஞ்சிதையாத கண்ணோட்டம்
3. வேண்டாமை என்னும் செருக்கு
4. சொற்பொழிவாளருக்கு வள்ளுவர் கூறும் வழிமுறைகள்
5. தோன்றில் புகழோடு தோன்றுக
6. தீயவை எதிர்த்து நிற்கும் செம்மை
7. எச்சமே அளவுகோல்
8. உதவி வரைத்தன்று உதவி
9. வருவன எதிர்நோக்கும் வள்ளுவர் பார்வை
10. வீடுதோறும் கலையின் விளக்கம்
11. பயிற்றிப் பல கல்வி தந்து பாரை உயர்த்துவோம்
12. நிதிமிகுந்தவர் பொற்குவைதாரீர்
13. ஆள்வினை உடைமை
14. செயல்வேண்டும்
15. செயற்கரிய செய்வர் பெரியர்
16. எல்லோருக்கும் கல்வி
17. இல்வாழ்க்கை
18. மானம் பார்க்கின் கெடும்
19. வசை இலாவண்பயன் குன்றும்
20. அறிவுடையார் எல்லாம் உடையார்
21. நிறை காக்கும் காப்பு
22. நினைக்கப்படும்

# வல்லுநர் வழி நிற்றல்

**டாக்டர் வா.செ. குழந்தைசாமி**

நாம் வாழும் உலகில் இன்று தனியார் மயமாதல், தாராளமாக்கல், உலக மயமாதல் ஆகிய சக்திகள் ஆதிக்கம் செலுத்துகின்றன. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இவற்றின் தாக்கம் ஒரு நாட்டைப் பாதிப்பதைத் தடுக்க இயலாது. சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ இவற்றின் பாதிப்பு இருந்தே தீரும். இதன் விளைவாக, முன்பு இருந்ததைவிட இன்றைய உலகம் போட்டி நிறைந்ததாகி விட்டது. இந்தச் சூழ்நிலையில் நாம் போட்டியில் வெற்றி பெறும் திறன் பெற்றிருக்க வேண்டும். இதை ஆங்கிலத்தில் competitiveness என்று கூறுகிறார்கள். இத்திறனில் இந்தியா மிகவும் பின்தங்கி உள்ளது. 53 நாடுகளின் போட்டித்திறனை ஒப்பிட்டதில் நாம் ஏறத்தாழ கடைசியில் அதாவது 48-ஆவது இடத்தில் இருக்கிறோம். அமெரிக்கா முதல் இடத்தில் இருக்கிறது. சிறிய நாடான தைவான் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. சிங்கப்பூர் நான்காவது இடத்தில் இருக்கிறது.

இதற்கான காரண்ம பற்றியும் நமது திறனை உயர்த்துவது பற்றியும் நாம் சிந்திக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். இதே ஆய்வு இன்னொரு தகவலையும் கூறுகிறது. நாம், மேலாண்மை பொறுப்புகளில், நிபுணர்களைப் பயன்படுத்துவதில் இன்னும் பின் தங்கி இருக்கிறோம். இந்த அம்சத்தில் நாம் 53 நாடுகட்குள் 51-ஆவது இடத்தில், அதாவது ஏறத்தாழ கடைசியில் இருக்கிறோம்.

அறிவியலும், தொழில் நுட்பமும் ஆட்சிசெய்யும் இன்றைய உலகில் ஒவ்வொரு துறையிலும் நிபுணத்துவம் இல்லாது நாம் பொது அறிவின் அடிப்படையில் போட்டி போட இயலாது. பொது அறிவு எல்லாத் துறைக்கும் தேவை. ஆனால், எந்தத் துறைக்கும் அதுமட்டுமே போதுமானது அன்று.

வள்ளுவர் நடைமுறை வாழ்வுக்கு நூல் எழுதினார் நடைமுறை வாழ்வு செயலாம் ஆனது. வள்ளுவம் ஒவ்வொரு துறையிலும் பெரும்பாலும் செயலுக்குத்துணை நிற்கும் கருத்துகளையே சொல்கிறது. சில வினைகளை நாமே செய்யலாம். சிவற்றை மற்றவர் துணைகொண்டு செய்ய வேண்டி உள்ளது. பிறரைக் கொண்டு பணிசெய்வதில் முக்கியமான பொறுப்பு அதற்கு ஏற்ற வரைத் தேர்ந்தெடுப்பதுதான். ஏற்றவரைத் தேர்ந்து எடுத்து விட்டால் பாதிப்பணி முடிந்து விடுகிறது. எனவே பெரிய நிறுவனங்களில் முக்கியப் பொறுப்பில் இருப்பவர்களுக்கு முக்கியமான தகுதி ஒவ்வொரு பணிக்கும் அதற்கு ஏற்ற திறமையாளர்களைத் தேர்வு செய்வதுதான்.

வினை செய்யத் தேர்ந்தெடுக்கப்படுவனிடம் என்னென்ன திறமைகள் இருக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ளுதல் முக்கியம். வள்ளுவர் குறிப்பிடும் ஒரு கூறுபாடு மிகவும். முக்கியமானது. வினைசெயல் வகையில் வள்ளுவர் கூறுவார்.

***செய்வினை செய்வான் செயல்வினை அவ்வினை***
***உள்ளறிவான் உள்ளம் கொளல்***

(அறிவியலும் தொழில் நுட்பமும், ஆட்சி செயும் இந்த காலத்தில் எந்தத் துறையிலும் நிபுணத்துவம் இன்றியமையாததெனக் கருதப்படும் இந்தச் சூழ்நிலையில் 2000 ஆண்டுகட்கு முன்பே) ஒரு செயலைச் செய்வதற்கு **'உள் அறிவான்'** உள்ளம் கொளல் தேவை என்கிறார். அதாவது 'உள்அறிவான்'. கருத்தை அறிய வேண்டும். 'உள் அறிவான்' என்பது ஓர் அழகான சொற்றொடர். ஆங்கிலத்தில் Expert, Exprienced Person, Professional என்றெல்லாம் சொல்கிறோமே இவையனைத்திற்கும் பொருத்தமான சொல். செய்ய வேண்டிய வினையின் பரிமாணங்களை அறிந்தவன். அதன் நெளிவு, சுளிவுகளை அறிந்தவன். தான் பல முறை செய்ததன் மூலமோ, தன் மேற்பார்வையில் செய்வித்ததன் மூலமோ. அந்தப் பணியை முடிக்கும் பாதையில் தட்டுப் படக்கூடிய கல்லையும், முள்ளையும், தடைகளையும். தடங்களையும் எண்ணிப் பார்த்து அறிவுரை கூறும் அனுபவம் உடையவன். அவன் தான் அவ்வினையின் 'உள் அறிவான்'. மேலான்மைத் தத்துவங்களும். நிபுணர் பங்களிப்பின் முக்கியத்துவமும் பரவலாக இடம் பெற்றிருக்கும் இந்தக் காலத்தில் கூட இந்தியா போன்ற பின் தங்கிய நாடுகள் நிபுணத்தவத்தின் முக்கியத்துவத்தை உரிய அளவில் பயன்படுத்திக் கொள்வதில்லை என்று முன்னேறிய நாட்டினர் நம்மைக் குறை சொல்கிறார்கள். அதை மெய்ப்பிக்கும் வகையில் நாம் Professional Managers என்ற பிரிவினரைப் பயன்படுத்துவதில் 53 நாடுகளிடையே, 51-ஆவது இடத்தில் அதாவது கடைசி இடத்தில் இருக்கிறோம் உள் அறிவான் அதாவது Profes- sional Expert என்பவரின் கருத்து அறிய வேண்டும் என 2000 ஆண்டுகட்கு முன்பே வள்ளுவர் கூறியிருக்கும் அறிவுரை நமது இன்றைய தேவை.

***செய்வினை செய்வான் செயல்வினை அவ்வினை***
***உள்ளறிவான் உள்ளம் கொளல்***

என்ற குறள் வழியாக நமக்கு அருமையான ஒரு அறிவுரையும் கிடைக்கிறது. Expert என்பதற்கு ஒரு நல்ல தமிழ்ச் சொல்லும் கிடைக்கிறது.

# கருமம் சிதையாத கண்ணோட்டம்

மனிதன் பற்று, பாசாங்கட்கு அடிமைப்பட்டவன். நன்பர், உறவினர் கேட்டால் உதவும் மனப்பான்மையுடையவன். அது இயற்கை, இயற்கையோடு இணைந்து செல்வதும் தேவை. அதற்கு எதிர்நீச்சல் போடுவது தேவைப்படும்பொழுது அதற்கேற்ற அணுகுமுறையைக் கையாள வேண்டும்.

வள்ளுவரும் கண்ணோட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். அதற்கென ஓர் அதிகாரமே வகுக்கிறார். கண்ணோட்டத்திற்குப் பரிமேலழகர் கொடுக்கும் உரை; தன்னோடு உடன் பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்க மாட்டாமை; சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி 'தாட்சணியம்' எனப் பொருள் கூறுகிறது. சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் நடுநிலை தவறாது நடக்க வேண்டும் என்றவர் கண்ணோட்டம் காட்டச் சொல்வது எவ்வாறு பொருந்தும்; என்ற கேள்வி எழுகிறது.

நாம் அன்றாட வாழ்க்கையில், பலமுறை இப்படிப்பட்ட நிலைமையைக் சந்திக்கிறோம். கடமை ஒருபுறம்; நன்மை, தீமை பற்றிய எண்ணம் ஒரு புறம். நண்பர்கள், உறவினர், சில சமயங்களில் மேலதிகாரிகள் வேண்டுகோள் ஒருபுறம் செய்ய வேண்டும் என்ற ஆசை ஒரு புறம்; செய்வது முறையா என்ற கேள்வி ஒரு புறம். இந்த நிலையைச் சமாளிக்க வள்ளுவர் வழி கூறுகிறார்,

*கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு*
*உரிமை யுடைத்தில் வுலகு*

நமக்கு ஒரு குறிக்கோள் இருக்கலாம்; அல்லது செய்யும் பணியில் சில விதிமுறைகள் இருக்கலாம். கடைப்பிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகள் இருக்கலாம். அவற்றிற்கு இடையூறு வராது. அவை சிதைவுறாது கண்ணோட்டம் காட்ட வல்லார்க்கு இவ்வுலகு உரிமையுடைத்து என்கிறார். நண்பர்கள் சொல்லை மறுக்காதிருப்பதும் தேவை. ஆனால், அதே சமயத்தில் அவ்வேண்டுகோளின் தன்மையை ஆராய்வதும் தேவை நாணயம் கைக்கு வந்தால் அது செல்லும் நாணயமா, செல்லாத ஒன்றா எனப் பரிசீலிக்கிறோம். செல்லும் எனில் ஏற்கிறோம். செல்லாத ஒன்றைப் புறக்கணிக்கிறோம். அது போலவே நண்பர், உளவினர் ஆகியோரின் வேண்டுகோள் வரும்பொழுது கருமம் சிதையாது. அல்லது குறிக்கோளுக்கு இடையூறு நேராது. அல்லது ஒழுக்க நெறிகட்குப் புறம்பில்லாது, அதை செய்ய இயலுமா எனப் பார்க்கவேண்டும். தன்னிடம் வரும் வேண்டுகோள் எஃதாயினும் ஏற்காது. அல்லது

எல்லாவற்றையும் மறுக்காது. நம்மை அணுகியவர்பால் அன்பு காட்டி, அவரவர் வேண்டுகோளைப் பரிவுடன் கேட்டு, கருமம் சிதையாமை என்ற உரை கலனில் வைத்து உரைத்துப் பார்த்துச் செயலாற்ற வேண்டும். அவ்வாறு செய்பவர்களின் நடத்தையில் கனிவு இருக்கும், கண்டிப்பு இருக்கும். ஆனால் கடுமை இருக்காது, தாட்சண்யம் இருக்கும்; உதவும் உள்ளம் இருக்கும். ஆனால் தவறு நடைபெறாது, தனிவாழ்விலும் சரி, பொதுவாழ்விலும் சரி நமக்குக் கண்ணோட்டம் வேண்டும், பழகியோர் வேண்டுகோளைப் பரிவுடன் பார்க்கும் பண்பு வேண்டும்; ஆனால் கருமம் சிதையாது கண்ணோடும் தகுதியை நாம் பெற்றிருக்க வேண்டும்

*கருமம் சிதையாது கண்ணோட வல்லார்க்கு*
*உரிமை யுடைத் திவ்வுலகு*

இது வள்ளுவர் வாழ்வியல்.

# வேண்டாமை என்னும் செருக்கு

பொதுவாக நாம் உலக வரலாற்றில் உயர்ந்து நிற்கும் சில தனிமனிதர்களைப் பார்ப்போமாயின் ஒரு கூறுபாடு எல்லோரிடத்தும் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். அவர்கள் எந்தத்துறையினராக இருந்தாலும் அது பொருந்தும். அவர்கள் அனைவருமே எளிய வாழ்க்கையினர். தங்களது தேவைகளைக் கடுமையாகக் குறைத்துக் கொண்டவர்கள். அடிப்படையில், தனிமனிதர் என்ற அளவில், தங்கள் சொந்தத் தேவை என்ற அளவில் வேண்டாமை என்ற கவசம் பூண்டவர்கள். அப்படியானால் அவர்கள் துறவிகளா எனில் துறவிகள் அல்லர். இந்த உலக வாழ்வில் ஈடுபாட்டோடு வாழ்ந்தவர்கள். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற அடிப்படையில் தங்களது ஆசைகளை அமைத்துக் கொண்டவர்கள். மண்ணில் தெரியுது வானம், அது நம் வசப்படலாகாதோ என்று வானத்தை நோக்கி, நோக்கிக் கை நீட்டியவர்கள். ஆனால் அவர்கட்கு அவர்களுடைய பாதையில் பயணத்திற்கு வலிமை சேர்த்தது வள்ளுவர் மொழியில் சொல்வதானால் தனிப்பட்ட தேவை என்ற அளவில் 'வேண்டாமை என்னும் செருக்கு'.

உலகின் எந்த மரபிலும், குறிப்பாகத் தமிழ் மரபில் செருக்கு வேண்டப்படுகிற குணாதிசயம் அன்று, பாராட்டப்படும் பண்பு என வள்ளுவர் ஒரு முறைக்குப் பல முறை பணிவுடமையின் பெருமை பேசுவார். 'ஏல்லார்க்கும் நன்றாம் பணிதல்' என்பார். 'பணிவுடையான் இன் சொலனாதல்' ஒருவர்க்கு அணி என்பார். 'பணியுமாம் என்றும் பெருமை' என்பார். இந்த அளவிற்குப் பணிவை. ஆங்கிலத்தில் Humility என்கிறோமே அந்தப் பண்பை வியந்து பேசும் வள்ளுவர், ஓரிடத்தில் 'செருக்கு' எனும் குணத்தை வியந்து பேசுகிறார்.

*விறல் ஈனும் வேண்டாமை*
*என்னும் செருக்கு*

என்கிறார் விறல் என்பது வலிமை; இங்கு வேண்டாமை என்பது துறவு பூணுவது அன்று. ஆசைகளைத்துறப்பது அன்று. தனிப்பட்ட முறையில் தனக்கென எந்த ஒரு ஆசைக்கும். விருப்பத்திற்கும் அடிமைப்படாது ஆசைகள் அனைத்தினும் உயர்ந்தவனாக உள்ள நிலையில் வாழக்கை நடத்துவது.

கடவுளிடம் ஆழ்ந்த பக்தியுடையவர்கள். தவம் மேற்கொண்டு ஒழுகுபவர்கள், கடவுளைப் பாடி, பரவி, பரவசமாகி நிற்பவர்கள் வேண்டுவது வீடு பேறு, அதாவது மோட்சம் அந்த வீடும் வேண்டா விறலினர் என்று 'வேண்டாமை என்றும் விறல்' பற்றிச் சேக்கிழார் பெருமான் பேசுகிறார்.

*ஓடும் செம்பொனும் ஒப்பவே நோக்குவார்*
*கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்*
*கூடும் கொள்கை கும்பிடலேயன்றி*
*வீடும் வேண்டாவிறலின் விளங்கினார்*

என்று பாடுகிறார். 'விறல் ஈனும் வேண்டாமை என்னும் செருக்கு' என்று வள்ளுவர் பிறர்பொருள் மீது ஆசைப்படாமை என்ற அதிகாரத்தில் பேசுகிறார் ஆயினும் **'விறல் ஈனும் வேண்டாமை என்னும் செருக்கு'** என்பது அவருடைய பொதுப்பிரகடனம். வேண்டாமை என்னும் **பண்பு தேவை** என்று கூறி இருக்கலாம். ஆனால் அவர் வேண்டாமை என்னும் பண்பு என்று கூறவில்லை. அந்த அளவில் நிற்க வில்லை. வேண்டாமை என்னும் 'செருக்கு'த் தேவை என்கிறார். என்னுடைய அனுபவத்தில் நான் பெரிதும் விரும்பிய குறள்களில்; கடைப்பிடித்த குறள்களில்; எனக்குத் துணைநின்ற குறள்களில் இதுவும் ஒன்று.

மனிதன் தலதரப்பட்ட ஆசைகளின் குறிக்கோள்கள் களன் கூட்டு. இந்த ஆசைகள், குறிக்கோள்தான் மனிதனை இயக்கும் சக்தி: மனித வாழ்வு எனும் ஒளிவீசும் விளக்கின் திதிக்கு எண்ணெய் இதுதான். நாம் ஒவ்வொருவரும் நமது ஆசைகளை நிறைவேற்ற, குறிக்கோள்களை அடையப் பலவகைகளில் பாடுபடுகிறோம். இந்த முயற்சியில் நாம் எப்பொழுதும் தலைநிமிர்ந்து நிற்க, விழையும் பொருளேயாயினும் அதற்குக் கொடுக்க வேண்டிய விலையில் நாம் தரம் தாழாது நிற்க, நமக்கு **வேண்டாமை எனும் செருக்கு** வேண்டும். நாம் அடைய இருக்கும். குறிக்கோள் எதுவானாலும் அதற்கொரு விலையுண்டு. அந்தவிலை தியாகமாக இருக்கலாம். தகுதியாக இருக்கலாம். உழைப்பாக இருக்கலாம். நண்பர்களுடைய தொண்டர்களுடைய ஆதரவாகவும் இருக்கலாம். 'எதுவாயினும் அவரவர் தம் நிலை தாழார் அரசரென்போம்' என்பான் கவிஞன்:

*தம்மொடு கொள்ளாத கொள்ளாதுலகு*

என்பார் வள்ளுவர். ஒரு முயற்சியில் வெற்றி பெற்றால் மட்டும் போதாது. குறிக்கோளை அடைந்தால் மட்டும் போதாது. 'தம்மொடு கொள்ளாத' அதாவது தம் நிலையில் தாழாத நிலையில் நின்று. தாழாத வழியில் சென்று தமது குறிக்கோளை அடைய வேண்டும். ஒன்றைப் பெறுவதற்கச் செலுத்த வேண்டிய கட்டணம் எதுவாயினும். அதை உலகு ஒம்பும் நாணயத்தில் செலுத்தித்தான் பெறுவேன். என் தகுதிக்குத் தாழ்ந்ததென உலகு கருதும் ஒரு நிலையில் நின்று, பெறுவது இயலுமாயினும் நான் பெற வேண்டேன் என்பதை வாழ்க்கை நெறியாகக் கொள்ள ஒருவர்க்கு வள்ளுவர் கூறும் **'வேண்டாமை என்னும் செருக்குத் தேவை'**

# சொற்பொழிவாளருக்கு வள்ளுவர் கூறும் வழிமுறைகள்

பொதுவாக மருத்துவம், பொறியியல், வேளாண்மை போன்ற தொழிலில் இருப்பவர்கள். களத்தில் இறங்கிப் பணியாற்றுபவர்கள் செயலை அடிப்படையாகக் கொண்டவர்கள், எனவே அவர்கட்கு மொழித் திறன் அவ்வளவு முக்கியமானது அன்று என்ற கருத்து பரவலாக நிலவி வந்த காலம் ஒன்று உண்டு. பொறியியல் துறையைச் சேர்ந்தவர்கள் ‘வரைபடங்கள்’ தான் எங்கள் மொழி. கணிதம் தான் எங்கள் மொழி: Drawing is our language; mathamatics is our language என்று கூறிய காலம் ஒன்று உண்டு. ஆனால் இன்று நிலைமை மாறி விட்டது. எந்தத் துறையினராக இருந்தாலும், ஒரு கருத்தை மற்றவர்கட்குப் புரியும் வரையில் எடுத்துச் சொல்ல வேண்டிய தேவை இன்று ஏற்பட்டிருக்கிறது. **communication skill என்பது பொறுப்பில் உள்ள அனைவரிடமும் எதிர்பார்க்கப்படுகிறது.**

ஒரு கருத்தை எடுத்துக் கூறும் இடம் ஒரு மாபெரும் மக்கள் திரள் கொண்ட அவையாக இருக்கலாம். சில நூறுபேர் மட்டுமே கொண்ட மாநாடாக இருக்கலாம். அதனினும் சிறிய கருத்தரங்காக இருக்கலாம். இவற்றின் முன் ஒருவர் தமது கருத்தை எடுத்து வைப்பதற்குத் தேவையான இலக்கணம் கூறி அவையறிதல், அவை யஞ்சாமை என இரண்டு அதிகாரங்களே வருத்திருக்கிறார் வள்ளுவர். இன்றிருப்பது போன்ற அரசியல் கட்சிகளும். பொதுக் கூட்டங்களும். சட்டப் பேரவைகளும் வாக்கு வாதங்களும், வாக்கெடுப்புகளும் இல்லாத சூழ்நிலையில் ஒரு சபையின் முன் பேசுவதற்கு இரண்டு அதிகாரங்கள் வகுத்திருக்கிறார் என்பது முக்கியமாகக் கருத வேண்டிய ஒன்று. வள்ளுவர் பயனில சொல்லாதவர். அவரே இரண்டு அதிகாரங்கள் வகுத்திருக்கிறார் என்றால் இந்தச் சொல்திறன் எவ்வளவு முக்கியம் என்பது புலனாகும்.

சொல்வன்மை பற்றி வள்ளுவர் கருத்தைக் கூறுபவர்கள் பற்றிப் பேசுபவர்கள் முக்கியமாக அவையஞ்சாமையின் தேவை பற்றிப் பேசுவார்கள். உயிர்க்கஞ்சாது பகையை எதிர்கொள்ளும் திறனுடையாரும் அவை முன் நின்று தம் கருத்தை முன்வைக்க அஞ்சுவர். எனவே அவை முன் நம்பிக்கையுடன், துணிவுடன் நின்று கருத்தை முன்வைக்கும் நெஞ்சுறுதி வேண்டும்.

அவையஞ்சாமைக்கு அடுத்ததாக ஒருவர் தாம் எதிர்கொள்ளும் அவையின் தன்மையை அறிந்து கொள்ள வேண்டும். அவையினரின் கல்விப் பின்னணி, சமுதாயத்தில் அவர்கள் தரம் என்ன, தாம் சொல்வதை எந்த அளவிற்கு உள்வாங்கிச் செரிமானம் செய்து கொள்ளக் கூடியவர்கள் என்பதை மதிப்பிடவேண்டும் என்கிறார். **இவற்றைப் பொதுவாக எல்லோரும் எடுத்துவிளக்குகிறார்கள்.**

**பேசுகிறார்கள் ஆனால் நம்முடைய கவனத்தை அவ்வளவாகக் கவராத ஆனால் மிகுந்த அனுபவ அறிவு செறிந்துள்ள ஒரு குறள் குறிப்பிடத்தக்கது. அதை நான் இங்கு வலியுறுத்த வேண்டும்.**

*இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக; சொல்லின்*
*நடை தெரிந்த நன்மையவர்*

என்கிறார்.

‘இடை தெரிந்து சொல்லுக’ என்பது சொற்பொழிவாளருக்குத் தாரக மந்திரம் போன்ற அறிவுரை. என்பதற்கு, பரிமேலழகர் அவையின் ‘செவ்வி’ தெரிந்து சொல்ல வேண்டும் என்கிறார். செவ்வி என்பது. இந்த இடத்தில், இடைதெரிந்து அவையோர் எந்த அளவிற்கு நமது பேச்சைக் கேட்க விருப்ப முள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை உய்த்து உணர்வதாகும். நாம் பங்கேற்கும் கூட்டத்தில் நாட்டின் பிரதமரே பேச இருக்கிறார், அல்லது மிகமுக்கிய மான தலைவர் ஒருவர் உரை நிகழ்த்த இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவருடைய உரையைக் கேட்க மக்கள் கூடி இருக்கிறார்கள். அவர் கடைசியில் பேசுவார். இடையில் உரைநிகழ்த்தும் சிலரில் நாமும் இருந்தோமாயின் நாம் எவ்வளவு சிறப்பாகப் பேசினாலும் ஒரு குறிப்பிட்ட, குறுகிய காலத்துக்கு மேல் நாம் பேசுவதை அவையினர் அவ்வளவாக விரும்ப மாட்டார்கள் என்பதை நாம் உணர்ந்து பேசவேண்டும். ‘அவை’. சிறந்த சொற்பொழிவைப் புரிந்து கொள்ளும் திறனுடையதாக இருக்கலாம். இருந்தாலும். அந்தச் சூழ்நிலையில் அதன் ‘செவ்வி’ நமது சொற்பொழிவில் சிறிது நேரத்திற்கு மேல் மனத்தைச் செலுத்துவதாக இல்லை.

சில சமயங்களில் சொற்பொழிவிற்குப் பின் கலை நிகழ்ச்சி இருக்கும். வந்திருப்பவர்களில் பெரும்பாலோர் முக்கியமாகக் கலை நிகழ்ச்சிக்காகவே வந்திருப்பார்கள். சொற்பொழிவுகள் எப்பொழுது முடியும் என்று காத்துக் கொண்டிருப்பார்கள். பொன்னையும், மாணிக்கத்தையும் பழிக்கும் கருத்துக் கோவையை இனிய குரலில், எளிய நடையில் சொன்னால்கூட அவர்கள் ஈடுபாட்டுடன் கேட்க மாட்டார்கள். அது அவர்கள் அறிவாற்றலின் குறை அன்று. நமது சொற்பொழிவின் தரத்தில் குறை அன்று. சபையின் செவ்வி ஏற்றதாக இல்லை. அவர்கள் வேறு எதற்கோ காத்திருக்கிறார்கள்.ஒரு சொற்பொழிவாளர் அவை எதுவாயினும் வெற்றிகரமாகச் செயல்படவேண்டுமானால், அவர் அவையின்

இடைதெரிந்து

நன் குணர்ந்து

சொல்லவேண்டும். அவை யறிதலில் இது தலையாய தேவை. சொற்பொழிவாளருக்கு வேதவாக்கு.

# சான்றோர் வாக்கு - 1

*தோன்றில் புகழோடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று*

என்பது வள்ளுவம். மக்களாகப் பிறப்பின் உலகில் புகழ் பெறத்தக்க குணங்களுடன் பிறக்க வேண்டும். அவற்றைப் பெறவேண்டும். அஃதிலார் பிறவாதிருந்திருப்பின் நன்றாகும் எனப் பொருள் கொள்வது பொருந்தும். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் வையத்தில் புகழ்பட வாழ்தலின் சிறப்பை மட்டும் பேசுவது போன்று தோன்றினும் இக்குறளின் அடிப்படை. 'தமிழர் பண்பாடு' ஆகும். தமிழினத்தின் பாரம்பரியத்தை, பண்பாட்டை எடுத்துரைப்பதாகும்.

பண்டைய தமிழ் இனம் வாழ்வின் குறிக்கோள் என ஒன்றைக் கருதியிருக்குமாயின் கருதிய அதை அடைவதன் முக்கியம் பற்றிப் பேசியிருக்குமாயின் அது 'புகழ்' பெற வாழ்வதுதான். இங்கு நாம் ஒரு வேறுபாட்டை வலியுறுத்த வேண்டும். 'புகழ்' வேறு; 'புகழ்ச்சி' வேறு. இன்று நாம் எழுத்தில், பேச்சில், கவியரங்கில் படைப்பவை, கேட்பவை பெரும்பாலும் புகழ்ச்சியேயாகும். அது அவ்வளவாக உண்மை இல்லாதது. சிலர் தாமாகக் கூட வேண்டிப் பெறுவது, விலைகொடுத்தும் வாங்குவது, அதனால்தான் தமிழின் பெருமை பேசவந்த பாரதியார் ;

*யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவனைப்போல்*
*ளங்கோவைப்போல், பூமிதனில் யாங்காணுமேம்ம கண்டதில்லை*
*'உண்மை' வெறும் 'புகழ்ச்சி' இல்லை*

என்கிறார். எனவே புகழ் வேறு, புகழ்ச்சி வேறு. இன்றைய சமுதாயத்தில் நாம் காண்பது புகழ்ச்சி. பண்டைத் தமிழர் வாழ்வின் குறிக்கோளாக வகுத்தது 'புகழ் அடைதல்'. செயல் எதுவாயினும் அதன் பயன் புகழ் பெறுவதாக இருக்க வேண்டும். ஒரு யாத்தியையாயின், அடையும் இடம் வேண்டும். தவம் ஆயின் பெறும் வரம் வேண்டும். மனித வாழ்வுக்கும் ஒரு குறிக்கோள் வேண்டும். பண்டைத் தமிழர்க்கு வாழ்வில் குறிக்கோள் 'புகழ்'. எனவே தமிழ்ப் பண்பாட்டின் குறிக்கோள் சமுதாயத்தோடு தொடர்புடைய வாழ்வு. சமுதாய நலனில் ஈடுபாடு கொண்ட வாழ்வு. ஆமைபோல் ஐந்தடக்கி, மக்களிடமிருந்து விலகி நிற்கும் வாழ்வன்று. புகழ் வானத்தினின்று வருவது அன்று. அது மக்களிடமிருந்து வருவது, மக்களொடு தொடர்பு கொண்டு வாழ்வாருக்கே இயல்வது.

*ஒன்றா உலகத்து உயர்புகழ் அல்லால்*
*பொன்றாது நிற்பதொன்றில்*

என்பார் வள்ளுவர். அனைத்தும் பொன்றும் உலகில் போன்றாக ஒன்று புகழ் என்பார்.

*மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்*
*தம்புகழ் நிறுவித்தாம் மாண்டனரே*

என்பான் புலவன். நிலையா உலகில் நிலைத்த ஒன்று புகழேயாகும். பாண்டிய மன்னன் இளம்பெருவழுதி மனத்தில் ஒரு கேள்வி பிறக்கிறது. இந்த மண்ணில் எத்தனையோ போர்களைப் பார்க்கின்றோம். போட்டி, பொறாமை, சூது, சூழ்ச்சி, சிறுமைகளை பார்க்கிறோம். இருந்தும் இவ்வுலகு தொடர்ந்து நடக்கிறது, வாழ்கிறது, வளர்கிறது. அதற்கு என்ன காரணம்.

*உண்டாலம்ம இவ்வுலகம் - அதாவது இவ்வுலகம் இருக்கிறது*
*எதனால்?*
*புகழெனின் உயிரும் கொடுக்குவர்*
*பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்*

புகழென்றால் உயிரையும் கொடுத்துப் பெறுவார் பழியென்றால் அதனால் உலகம் முழுவதும் தம்வசம் வருவதாயினும் ஏற்கார். அப்படிப்பட்டவர்களும் இருப்பதால் தான் இவ்வுலகமே இருக்கிறது எனக் கவிஞனும், அரசனுமான பாண்டியன் முடிக்கிறான். தமிழர் பண்பாட்டில் மனிதர்கள் மாண்பெனச் சொல்லத்தக்க அனைத்திலும் ‘புகழே‘ மேலிடம் பெறுகிறது.

கம்பர் தனது இராம காதையைத் தமிழ் பண்பாடு தழுவி நின்று எழுதியவர். அவர் படைத்த வாலி, குரங்கினைத் தலைவன், குரங்கின் அரணன் ஆயினும், மறைந்து நின்று அம்பெய்திய இராமன் ‘புகழ்‘ அற்ற செயல் செய்தான் என இடித்துக் கூறி

*பரமக்கழி இது நீ பூண்டால், புகழையார் பறிக்க வல்லார்*

என்கிறான். அதாவது இவ்வளவு பெரிய பழியை நீயே ஏற்பாயானால், புகழ் யார் பெறப்போகிறார்கள் என்கிறான். குரங்கினத்தரசனின் நெறியிலும் ‘புகழ்‘ முக்கியமான இடத்தைப் பெறுகிறது. கம்பனின் இராம காதையில் பாத்திரங்களும், அவற்றின் பண்புகளும் தமிழ் பண்பாட்டின் பின்னணியிலேயே படைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நாமறிவோம். இராவணனின் குறைபாடுகள் எவையாயினும், பொன்றாத ஒன்று புகழே என்பதில் நிலையாக நிற்கிறான். இந்திரஜித்திடம் அவனைப் போருக்குச் செல்ல வேண்டும் எனக் கூறும்பொழுது,

*பொன்றுதல் ஒருகாலத்துத் தவிருமோ? பொதுமைத்தன்றோ?*
*இன்னுளர் நாளை மாள்வர்; புகழுக்கும் இறுதி உண்டோ?*

எனக் கேள்வி எழுப்புகிறான். பதில் கேள்வியிலேயே இருக்கிறது. புகழுக்கு இறுதி இல்லை என்பதே அவன் முடிவு வாழ்வின் குறிக்கோள் ‘புகழ்பட வாழ்தல்‘ என்ற தத்துவம் ஆழ்ந்து நோக்கத்தக்கது. புகழ் விண்ணின்றும் வருவதன்று; வீடு பேறடையும் முயற்சியின் விளைவன்று. புகழ் மக்களிடம் இருந்து வருவது. மக்கள் வாழ்வைத் தொடும் வாழ்க்கை முறையிலிருந்து வருவது. சுருங்கச் சொன்னால், சமுதாய ஈடுபாடு கொண்ட வாழ்க்கையின் அடிப்படையில் அமைவது புகழ். எனவே, மனிதனாகப் பிறந்தோர் அவர் சார்ந்த துறை எதுவாயினும், மருத்துவமாயினும், தொழில் நுட்பமாயினும், அரசியல் ஆயினும், இவையன்றி இந்நாட்டில் எளிய தொழில் எனக் கருதப்படும் பல்வகை உடல் உழைப்புத் தொழிலாயினும் அவரவர் செய்யும் தொழிலில் வாழும் வகையில் புகழ் பொங்க வாழ முயல வேண்டும். இது தெளிவான குறிக்கோள், இடத்துக்கு இடம், தொழிலுக்கு தொழில் மாறாத குறிக்கோள், சமுதாயத்தின்றும் விலகி நிற்காது. சமுதாயத்தோடு இணைந்து வாழ வேண்டும் எனும் குறிக்கோளை உள்ளடக்கியது. புகழ்பட வாழ்தல் இம்மையில் இன்பம் தருவதும், மறுமை என்றிருப்பின் மறுமைக்கும் உறுதி பயப்பதாகும். தமிழ்ப் பண்பாடு பற்றிப் பேசும்போது, தமிழ் வாழ்வுநெறி என்பது பற்றி எண்ணுவோமாயின் அது ‘புகழ்பட வாழ்வதுதான்‘. அது இம்மை, மறுமை இரண்டிற்கும் உறுதி பயப்பது. எனவேதான் வள்ளுவப் பெருந்தகை ‘‘தோன்றின் புகழொடு தோன்றுக’’ என்றார்.

# தீயவை எதிர்த்து நிற்கும் செம்மை

பொதுவாக நமது சமுதாயத்தில் பலர் இன்று தீமை வளர்கிறது. தீயவர்கள் வளம் பெறுகிறார்கள், நன்மை நலிகிறது. நல்லவர்கள் அல்லல் படுகிறார்கள் என்று கூறி, அடிக்கடி குறைபட்டுக் கொள்வதைப் பார்க்கிறோம். அதற்காக ஆட்சியாளர்களையும் கண்டிக்கிறோம். இதில் நியாயமும் இருக்கலாம். இந்தச் சூழ்நிலை ஒரு சமுதாயத்தில் வளர்வதோ, வளராமல் தடுக்கப்படுவதோ அரசாங்கத்தின் பொறுப்பு மட்டும் அல்ல. நன்மையைக் காப்பதும், தீமையை அழிப்பதும் காவலர்கள். அதாவது police மட்டும் செய்து முடிக்கக் கூடியதல்ல. சட்டம் எளிதில் இனம் கண்டு தண்டிக்க முடியாத தீச்செயல்கள் எத்தனையோ இருக்கின்றன. ஒரு சமுதாயத்தில் நன்மையும் தீமையும் அச்சமுதாய மக்களிடமுள்ள தீமையை எதிர்க்கும் உணர்வு, நன்மைக்குத் துணை நிற்கும் பண்பு இவற்றைப் பொறுத்தே இருக்கிறது. இதைப்பற்றி ஜான் டூயி என்ற மேலை நாட்டு அறிஞர் தெளிவாகக் கூறுகிறார்.

*நல்லவர்கள் என்பவர்கள் தீமை செய்யாதவர்கள் என்பது*
*மட்டும் அல்லர்; நல்லவர்கள் பிறருக்கு நன்மை செய்பவர்கள்*
*மட்டும் அல்லர். உண்மையிலேயே நல்லவர்கள் என்பவர்கள்*
*தீமையை எதிர்ப்பவர்கள் தான்*

என்கிறார். நல்லவர்கள் தீமையை எதிர்க்க வேண்டும். நமது சமுதாயத்தின் இன்றைய குறைபாடு, தீயவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்பது அல்ல. நமது சமுதாயத்தில் உள்ள நன்மைகள் தீமையை எதிர்ப்பவர்களாக இல்லை. அதை வேடிக்கை பார்ப்பவர்களாக, முணுமுணுப்புடன் சகித்துக் கொள்பவர்களாக இருக்கிறார்கள். இதை மனத்தில் கொண்டுதான் பாரதி, தனது 'பாப்பா பாட்டில்' குழந்தைகட்கே ஒரு வாழ்க்கை முறையைக் காட்டுகிறார்.

*பாதகம் செய்பவரைக் கண்டால் - நீ*
*பயங்கொள்ளலாகாது பாப்பா*
*மோதி மிதித்துவிடு பாப்பா - அவர்*
*முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா*

என்கிறார். அவர் கூற விரும்புவதெல்லாம், தீயவர்களைக் கண்டு அஞ்சவும் கூடாது, கண்டும் காணாது ஒதுங்கவும் கூடாது என்பது தான். இந்தக் கருத்தை அவர் தனது "பாஞ்சாலி சபதத்தில்" இன்னும் அழுத்தமாகக் கூறுகிறார். பாரதியின் "பாஞ்சாலி சபதத்தில்" ஒரு நிகழ்ச்சியை இங்கு பார்ப்போம். பாஞ்சாலி துரியோதனனுடைய சபையில் துகிலுரியப்படுவது, படித்தவர்கள், படிக்காதவர்கள் அனைவருக்கும் தெரிந்த ஒன்று. பாஞ்சாலியைத் துகிலுரிய அவள் கூந்தலைப் பிடித்துத் துச்சாதனன் தெரு வழியே இழுத்து வருகிறான். மக்கள்

தெருவின் இருபுறத்திலும் கூடி நின்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பாரதியின் வர்ணணையைப் பார்ப்போம் ;

*நீண்ட கருங்குழலை நீசன் கரம் பற்றி*
*முன்னிழுத்துச் சென்றான். வழிநெடுக பொதமவராய்*
*என்னே கொடுமை இதுவென்று பார்த்திருந்தார்*

என்கிறார். ஈக்கள் மொய்க்கும், ஈசல்கள் மொய்க்கும். ஆனால் இங்கு மக்கள் மொய்க்கிறார்கள். 'எனவே கொடுமை இது' என்று பெருமூச்சு விட்டுவிட்டு வேடிக்கை பார்த்திருந்தவர்களை வழிநெடுக 'நின்றார்கள்' என்று கூற மனமில்லாமல், 'மொய்த்தார்கள்' என்கிறார் பாரதி.

*ஊரவர்தம் கீழ்மை உரைக்கும் தரமாமொ*
*வீரமிலா நாய்கள்விலங்காம் இளவரசன்*
*தன்மை மிதித்துத் தராதலத்தில் கோக்கியே*
*பொன்னை அவள் அந்தப்புரத்தினிலே சேர்க்காமல்*
*நெட்டை மரங்களென நின்று புலம்பினார்*
*பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ*

என்கிறார். ஊர்மக்கள் வீரமிலாதவர்கள்; விலங்கையொத்த இளவரசனிடமிருந்து திரௌபதியை விடுவிக்க முயலாது, நெட்டை மரங்களென, இப்படியும் அநியாயம் நடக்கிறதே என நின்று செயலற்றுப் புலம்பினர். இந்தப் புலம்பலால் என்ன பயன்? பாரதி கூறிய புலம்பல் புதிதன்று. தீமை கண்டு புலம்புபவர்களை இன்றும் பார்க்கிறோம். நமது சமுதாயத்தில் எங்கும் பார்க்கிறோம்.

நாம் ஒரு உண்மையை உணர வேண்டும்.

> நியாயம் நீதி மன்றங்களால் மட்டும் ஒரு சமுதாயத்தில் நிலைநிறுத்தப்படுவதில்லை. அமைதி அரசாங்கத்தால் மட்டும் பாதுகாக்கப்படுவதன்று. தீயவர்கள் காவலர்களால் மட்டும் ஒடுக்கப்படுவதில்லை.

நீதி மன்றங்களும், அரசும், காவலர்களும் கருவிகள். அவற்றைப் பயன்படுத்துபவர்கள் மக்கள். அநீதியை எதிர்க்கும் மக்கள் சமுதாயத்தில் தான் நீதி நிலைக்கும். அநீதியை வேடிக்கை பார்க்கும் மக்கள் மத்தியில் எந்த நீதி மன்றமும் பயன்படாது. தீமையை எதிர்க்கும் மக்கள் மத்தியில் தான் நன்மை தழைக்கும். ஆயிரம் காவற்கூடங்கள் தீமையைச் சகித்துக்கொள்ளும் மக்கள் சமுதாயத்தில் பயன்படா. தீமையை எதிர்ப்பது என்பது நாம் பேசும் படங்களில் பார்ப்பது போன்று மக்கள் தலைவனோ அல்லது மக்களோ, தாங்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக்கொள்வது என்பதல்ல. தீயவர்களை முறைப்படி எதிர்ப்பது அஞ்சாது செயல்படுவது. ஒதுங்காது எதிர்கொள்வது. சான்றோர்கள் என்போர் சாதுகள், சாதுகள் என்போர் எதிர்கொள்வது, சான்றோர்கள் என்போர் சாதுகள், சாதுகள் என்போர் கோழைகள் அல்லர்.

அவர்கள் தர்மத்தைப் பாதுகாத்தவர்கள், பாதுகாக்கத் தவறாதவர்கள். எனவே ஒரு சமுதாயத்தில் ஒவ்வொரு குடிமகனும் தீயவை செய்யாதிருந்தால் மட்டும் போதாது. தீமையை எதிர்க்க வேண்டும். முறைப்படி எதிர்க்க வேண்டும். முன்பு தீமை மிகுந்தபோது அதை அழித்து நன்மையை நிலைநாட்ட இறைவன் அவதாரம் எடுத்து வந்தான். இன்னொரு அவதாரம் எடுத்து வருவதற்கான சாத்தியக்கூறு தென்படவில்லை. இன்னொரு அவதாரத்திற்காக நாம் காத்திருக்க இயலாது. எனவே, தீமை கண்டால் அறிஞர்கள் சீறி எழ வேண்டும். அறவழி வாழ்வு தேடும் நெறியினர் வெகுண்டு எழவேண்டும். தீயவை எதிர்த்து நிற்கும் செம்மை நமக்கு வேண்டும். அதை இளம் மனத்திலேயே வளர்க்க நினைத்த பாரதி, குழந்தைகளுக்குக் கூறும் அறிவுரையில் :

*பாதகம் செய்பவரை கண்டால் - நீ*
*பயம் கொள்ளலாகாது பாப்பா*
*மோதி மிதித்துவிடு பாப்பா - அவர்*
*முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா*

என்றார். அவரது அறிவுரை அனைவருக்கும் பொருந்தும். அவர் கூறிய காலத்தைவிட இன்று அதிகமாகவே பொருந்தும்.

# எச்சமே அளவுகோல்

ஒரு சமுதாயத்தில் பலர் பல துறைகளில் உயர்ந்த நிலையடைகிறார்கள், பதவி பெறுகிறார்கள், புகழ் பெறுகிறார்கள். அப்படிப் பதவியில் இருப்பவர் பலதரப்பினர்; புகழ் பெறுபவர் பலதரப்பினர். அவர்கள் ஈடுபட்டிருக்கும் துறைகள் பல, முன்னேற அவர்கள் பயன்படுத்தும் வழிகள் பல. எனவே உண்மையில் தக்கவர் யார்? தகுதியில்லாதவர் யார் என்பது எப்படி எடை போடுவது என்ற கேள்வி எழுகிறது. வள்ளுவர் இதற்கு வழிவகுக்கிறார். ஓர் அளவுகோலை நமக்கு அளிக்கிறார்.

ஒருவர் தமது வாழ்நாளில், அல்லது ஒரு பதவியில் இருக்கையில் ஒரு பொறுப்பை ஏற்றிருக்கும்பொழுது என்ன செய்தார், என்ன சாதனைகள் புரிந்தார், எப்படிப்பட்ட போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியவராயிருந்தார் என்பது உண்மையான அளவுகோல் அன்று. ஒருவர் மறைந்தபின் எதை விட்டுச் செல்கிறார், அல்லது பதவியிலிருக்கும் ஒருவர் அவர் பதவி விலகும்பொழுது எப்படிப்பட்ட நிறுவனத்தை விட்டுச் செல்கிறார் என்பதைப் பொருத்தே அவர் தகுதி மதிப்பிடப்பட வேண்டும்.

*தக்கார் தகவிலர் என்பது அவரவர்*
*எச்சத்தாற் காணப்படும்*

என்றார். தகுதியுள்ளவர்கள், தகுதியற்றவர்கள் என்பது அவர்கள் எதை விட்டுச் செல்கிறார் என்பதைப் பொருத்தே அமைகிறது. ஒரு அரசியல் தலைவராக இருந்தால், அவர் அப்பதவியிலிருந்து விலகியபின் அவர் விட்டுச்சென்ற மரபுகள் யாவை, அவர் உருவாக்கிய விழுமியங்கள் யாவை, அவற்றைப் பற்றித் தற்காலச் சமுதாயம் எப்படி மதிப்பிடுகிறது என்பது போன்றவை கருதப்பட வேண்டும். தான் பொறுப்பேற்றிருந்த இடத்திற்கு எப்படிப்பட்ட வாரிசுகளை உருவாக்கி வைத்துவிட்டுப் போயிருக்கிறார் என்பது தான் அளவுகோல். இந்த அளவு கோல் எல்லாத் துறையினருக்கும் பொருந்தும். ஒரு கல்லூரித் தலைவரை எடுத்துக் கொள்வோம். அவர் பதவிக் காலத்திற்குப் பின் அவர் விட்டுச் செல்லும் ஒழுக்கச் சூழ்நிலை, உருவாக்கியிருக்கும் சம்பிரதாயங்கள், அங்கு கூட்டியிருக்கும் புலமை நலம் வாய்ந்த வல்லுநர்கள், அந்த நிறுவனத்திற்கு மக்களிடையே என்ன தோற்றம் இருக்கிறது என்ற நிலைம இவற்றை வைத்துத் தான் நாம் எடை போட வேண்டும். அவர் பதவியிலிருந்தபொழுது எவ்வளவு பாராட்டுப் பெற்றார்; எத்தனை மாலைகள் போட்டார்கள்; எவ்வளவு பாராட்டுக் கூட்டங்கள் நடந்தன என்பதெல்லாம் முக்கியமன்று. அவை பல காரணங்கட்காகப் பலரால்

செய்யப்படலாம். ஆனால் ஒருவர் அந்தச் சூழலிலிருந்து விலகியபின் அவரைப் பற்றிப் போடப்படும் எடை உண்மையானது, நம்பிக்கைக்கு இடமளிப்பது. வள்ளுவர் இதை அழகாகக் கூறுகிறார்,

*தக்கார், தகவிலர் என்பது அவரவர்தம்*
*எச்சத்தாற் காணப் படும்.*

# உதவி வரைத்தன்று உதவி

மனிதன் தனித்து வாழ்பவன் அன்று. சார்ந்து வாழ்பவன். எனவே ஒருவரை ஒருவர் நம்புவது, ஒருவருக்கொருவர் உதவுவது என்பன வாழ்க்கையின் அன்றாட நிகழ்ச்சிகள். நாம் ஒருவருக்கு உதவி செய்கிறோம், அந்த உதவியின் பரிமாணம் என்ன என்ற கேள்வி எழுகிறது. ஒருவருக்கு உரிய காலத்தில் செய்த உதவி உலகிலும் பெரிது என ஓரிடத்தில் வள்ளுவரே கூறுகிறார். செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது என்கிறார். இறக்கும் தருவாயில் இருக்கும் ஒருவனுக்கு இரத்தம் தேவைப்பட்டு, அதைக் கொடுத்து உயிரைக் காப்பாற்றினால், அது காலத்தினாற் செய்த உதவி, உயிர் விலை மதிப்பற்றது, அதை காப்பதும் விலை மதிப்பைத் தாண்டிய உதவி. இது காலத்தினாற் செய்த உதவி. செய்த உதவியைத் திரும்பிச் செய்வது நன்றி உணர்வின் பாற்பட்டது. பட்ட கடனைத் திரும்பித் தருவது நியாய உணர்வின் பாற்பட்டது. ஆனால் உதவி எதுவும் செய்யாத நிலையிலும் ஒருவருக்கு உதவுவது தலைசிறந்த பண்பு. இவையெல்லாம் உண்மை. ஆனால் உதவியாள் அளவை வரையறுப்பது யார்?

உதவி செய்தவர்கள் செய்த உதவியின் அளவை, பரிமாணத்தை அளவிடுவது முறையாகாது, பண்புமாகாது. மற்றவர்கள் அளவிடுவதும் சரியன்று. உதவியின் பரிமாணத்தை, அந்த உதவியைப் பெற்றவர்கள்தான் அளவிட வேண்டும். அவர்கள் தான் மதிப்பிட வேண்டும். உதவியின் அளவு, பரிமாணம் என்ன என்ற கேள்வியை, வள்ளுவர் எழுப்புகிறார். அதற்கு அவர் முதல் கட்டமாக, உதவியின் அளவு பரிமாணம் அந்த உதவியில் இல்லை. அதைப் பெற்றவர்கள் மதிப்பீட்டில் இருக்கிறது. ஒரு தேவையின் அளவும் மதிப்பீடும் அந்தத் தேவையை உணரும் இடத்தில் இருப்பவர்க்குத் தான் தெரியும். எந்த ஒரு உதவியுன் மதிப்பும் அது செய்யப்படும் காலம், இடம், சூழ்நிலை இவற்றை பொருத்தே அமைகிறது. பெறுபவர் செய்யும் மதிப்பீடு தான் அளவு என்றால், பெறுபவர்கட்கு அதை மதிப்பிடும் அளவுகோல் எது என்ற கேள்வி எழுகிறது. எந்த ஒரு பொருளின் மதிப்பும் அதை அளவிடும் அளவுகோலைப் பொருத்தது. இங்கு, உதவியை மதிப்பிடும் அளவுகோல், பெறுபவரின் சான்றாண்மை என்கிறார் வள்ளுவர். ஒரு பொற்கொல்லர் தங்கள் நிறுக்கும் தராசில், ஒரு குன்றி மணியின் எடையும் துல்லியமாகத் தெரியும். அதையே விறகு நிறுக்கும் தராசில் வைத்தால், அதற்கு எடையே இருக்காது. ஒவ்வொருவருடைய சான்றாண்மையும் தராசு போன்றது. அது துல்லியதாக இருப்பவருமுளர்; தோராயமானதாக இருப்பவரும் உளர். எனவே, உதவியின் மதிப்பு, உதவியில் இல்லை. அதைப் பெறுபவரைப் பொருத்தது. பெறுபவர் உள்ளம் அவரது சான்றாண்மையைப் பொருத்தது. நாம் ஒருவருக்கு

உதவும்பொழுது, கைம்மாறு கருதிச் செய்தால், பயனை எதிர்பார்க்கிறோம். கைம்மாறு கருதாது செய்தால் நன்றி உணர்வை எதிர்பார்க்கிறோம். இரண்டு நிலையிலும் உதவியின் பரிமாணத்தை நாம் மதிப்பிடுவது பயன்தராது. அதைப் பெற்றவரின் சான்றாண்மையைப் பொருத்தது. உதவி வாமனனாகத் தோன்றலாம் ; அல்லது வானலையும் உயரலாம்.

*உதவி வரைத்தன்று உதவி; உதவி*
*செய்யப்பட்டார் சார்பின் வரைத்து*

என்பது வாழ்வியல் இலக்கணத்தில் ஓர் அரிய சூத்திரம்.

# வருவன எதிர்நோக்கும் வள்ளுவர் பார்வை

வள்ளுவர் தம் குறளில் நம்மைக் கவரும் கூறுபாடு, கருதும் தோறும் நம்மை அதிசயிக்கவைக்கும் கூறுபாடு, அவரது அணுகுமுறையில், பார்வையில் நாம் காணும் அசாதாரணத் தொலை நோக்கு ஆகும். அவருடைய கருத்துகள் பல காலத்தை ஊடுருவி, எதிர்கால வளர்ச்சியை எதிர்ப்பார்ப்பவனாக அமைந்துள்ளமை நம்மை உண்மையிலேயே வியப்பில் ஆழ்த்துகிறது. கல்வி பற்றிய வள்ளுவருடைய கருத்துகள் அவர் வாழ்ந்த கால வரம்புகளைப் பெரிதும் மிஞ்சி நிற்கின்றன. கல்வியில் அன்றைய சமுதாயம் காணாத பல வாய்ப்புகள், பல சாத்தியக் கூறுகளை வள்ளுவர் எண்ணியிருக்கிறார் என்பதற்கான, அல்லது எண்ணுவதற்கு இதமளிக்கும் வகையில் அவரது கூற்று அமைந்திருக்கிறது என்பதற்கான அகச்சான்றுகள் நிறைய இருக்கின்றன. உதாரணத்திற்கு இங்கு ஒரு குறளைப் பார்ப்போம்.

*ஊரென்னும் மாந்திரையர் அல்லால் பயவாக்*
*களரனையர் கல்லாதவர்*

புரிந்து கொள்வதற்கு எளிய குறள். இதன் பொருள் பின் வருமாறு :

கல்லாதவர்கள், ஒப்புக்கு அவர்களும் இருக்கிறார்கள் என்பதன்றி அவர்கள் களர்நிலம் போன்றவர்கள். அவர்களால் சமுதாயத்திற்குப் பயன் எதுவும் இல்லை.

வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் கல்வி ஒரு பொருளாதாரத் தேவையாக இருக்கவில்லை. அன்றைய சமுதாயம் உணவுக்கு, உடைக்கு, உறையும் குடியிருப்பிற்கு உடலுழைப்பாளர்களையே நம்பி இருந்தது. அன்றைய பொருளாதாரம் எழுத்தறிவு பெற்றவர்களின் அடிப்படையில் அமையவில்லை. தச்சரும், கொல்லரும், குயவரும், விவசாயிகளும் பயிற்சியின் அடிப்படையில் தொழில் செய்தவர்களே அன்றி, படிப்பின் அடிப்படையில் தொழில் செய்தவர்கள் அல்லர். இந்த நிலைமை பெரிய மாற்றங்களின்றி தொழில்யுகம் தோன்றும்வரை தொடர்ந்தது. தொழில் நாகரிகம் என்பது அறிவியல், தொழில் நுட்பத்தில் அடிப்படையில் அமைந்தது. அறிவியலையும் தொழில் நுட்பத்தையும் ஒரு தற்குறிச் சமுதாயம் பயன்படுத்த முடியாது. அறிவியலையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தக் கல்வி தேவை.

நாம் இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் இருக்கிறோம். இன்று நாம் காணும் சூழ்நிலை என்ன? அறிவியலும் தொழில் நுட்பமும் தவிர்க்க இயலாது. ஒரு வளர்ச்சிக் கருவியாக மலர்ந்து விட்டன. அவை இடம்பெறாத துறைகளே இல்லை. வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் காற்றுபோல வியாபித்து நிற்கின்றன. இன்று ஒரு நாட்டில் பொருளாதார நிலை அது எந்த அளவிற்கு அறிவியலையும் தொழில் நுட்பத்தையும் ஆழ்ந்து ஏற்கவும் பயன்படுத்தவும் புதியன படைக்கவும் அவற்றை இயலும் என்பதைப் பொறுத்தே இருக்கிறது. அறிவியலையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தும் திறன் ஒரு நாட்டின் கல்வி வளர்ச்சியைக் கொறுத்திருக்கிறது.

கல்வியின் பங்கில் இன்று ஒரு தலைகீழ் மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். பண்டைய நாளில் செல்வம் பெற்ற நாடு தான் அதன் மக்கட்குக் கல்வி அளிக்க இயலும் என்ற நிலை இருந்தது. ஆனால் இன்று கல்வி பெற்ற நாடுதான் செல்வம் பெற இயலும் என்ற நிலை உருவாகியிருக்கிறது.

இந்த நூற்றாண்டின் இரண்டாவது பகுதியில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியில் பெரும்பகுதி, 100க்கு 80 சதவிகிதத்திற்கு மேல் எழுத்தறிவு பெற்றிருந்த நாடுகட்கே போய்விட்டது. இதில் அண்மையில் மேலும் ஒரு மாற்றம் தோன்றியிருக்கிறது. முன்பு பரந்த அளவில் மக்கள் கல்வி என்று பார்க்கும்பொழுது ஆரம்பக்கல்வி பெற்றவர்கள் சதவிகிதம் கணிசமாக இருந்தால், அந்தச் சமுதாயம் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியைத் தனது பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்ள இயலும் என்ற நிலை இருந்தது. அண்மையில் ஐக்கிய நாடுகள் அய்வு நிறுவனத்தின் தொடர்புடன் செய்யப்பட்ட ஆய்வுகளிலிருந்து, ஆரம்பக் கல்வி போதுமானதாக இல்லை; உயர் பள்ளிக் கல்வி (Secondary Grade Education) இன்று குறைந்தபட்சத் தேவையாக இருக்கிறது என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

மேலே கூறப்பட்ட கருத்துகளில் சுருக்கம், விபரம் என்ன என்பது தெளிவாகிறது. இன்றைய சமுதாயத்தில் கல்வியில்லாத மக்கள் பொருளாதாரத் தேவைகட்கு பயனில்லாதவர்களாக ஆகிவிட்டார்கள். வள்ளுவர் மொழில் கூறுவதானால் அவர்கள் ‘‘களர் அனையர்’’, களர் நிலம் விளைச்சல் எதுவும் தராது. அதுவும் உலகில் ஒரு பகுதியாக இருக்கின்றது என்பதற்கு மேல் அதனால் பயன் இல்லை. அது போன்றவர்கள் கல்வி அறிவு இல்லாத மக்கள். அவர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு மேல் அவர்களால் சமுதாயத்திற்குப் பயன் இல்லை. இன்று அது உண்மை. வள்ளுவர் காலத்தில் கல்வி அப்படிப்பட்ட

பொருளாதாரத் தேவையாக இருக்கவில்லை. இருந்தும் வள்ளுவர் அன்றே ‘‘கல்வியில்லாதவர்கள் களரனையர்’’ என்று கூறியிருப்பது, அவரது பார்வை காலத்தை ஊடுருவிக் காணும் சிறப்புடையது என்பதற்குச் சான்று பகருகிறது.

கல்வி ஓர் அணிகலனாக, அலங்காரப் பொருளாக பண்பாட்டுத் தேவையாக பொருளாதார முக்கியத்துவம் இல்லாத ஒன்றாக இருந்த காலத்தில் வாழ்ந்த வள்ளுவர் அதன் தேவைகள் வற்புறுத்துவதில் இவ்வளவு தொலைநோக்கு விரிவுரைக்கு இடம் கொடுக்கும். உவமையைக் கையாண்டிருப்பது எண்ணந்தொறும் நம்மை ஆழ்ந்த வியப்பில் அதனின்றும் கடலாக ஆழ்ந்து சிந்தனையில் ஈடுபடுத்துகிறது. இப்படிப்பட்ட அசாதாரணப் பார்வையை காரணகாரியத்தோடு விளக்க இயலாத நிலையில் அவரைத் ‘‘தெய்வப் புலவர்’’ என்கிறோம்.

# சான்றோர் சிந்தனைகள்

## வீடுதோறும் கலையின் விளக்கம்

நாம் இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் இருக்கிறோம். இந்த நூற்றாண்டில் ஏற்பட்ட மாற்றங்கள், வளர்ச்சிகள், மகத்தானவை. ஆணுவைப் பிளந்து, அதன் ஆற்றலைப் பயன்படுத்துவது முதல், கணிப்பொறி கண்டுபிடிப்பு, விண்வெளிப் பயணம் போன்றன சரிதை படைத்த சாதனைகள். இவை அனைத்தினும் முக்கியமானது இந்த நூற்றாண்டில் கல்வி பெற்றுள்ள முக்கியத்துவம்.

வேளாண்மை நாகரிகத்தின், கல்வி பொருளாதாரத் தேவையாக இருக்கவில்லை. அணிகலனாக, அலங்காரப் பொருளாக, பண்பாட்டுத் தேவையாக மட்டுமே இருந்தது. சமுதாயத் தேவையாகக் கூட இருக்கவில்லை. உலகில் முடிசூடியாண்ட மன்னர்கள் வரலாற்றில் மிக முக்கியமானவர் அக்பர். அவர் வாழ்ந்தது . . . . நூற்றாண்டில் தான். அக்பருக்கு எழுதப்படிக்கத் தெரியாது. அது அவருடைய பெருமையைக் குறைக்கவில்லை. தொழிற்புரட்சி ஏற்பட்ட பின்னர் கல்வி, ஒரு பொருளாதார வளர்ச்சிக் கருவியாயிற்று – A tool for economic development, இன்று கல்வியே ஒரு முக்கியமான வளம். Education has become a major resources. கல்வி மற்ற இயற்கை வளங்கள் இல்லாது போனாலும் ஈடுகட்டும் திறன் வாய்ந்தது.

நமது முன்னோர்கள் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தார்கள். கல்வியின் பெருமை பேசாத பனுவல் தமிழில் இல்லை. வள்ளுவர் தமது குறளின் 133 அத்தியாயங்களில், கல்வி, கேள்வி, கல்லாமை எனக் கல்வியொடு தொடர்புடைய மூன்று அதிகாரங்கள் வகுத்திருக்கிறார். கல்வியின் பெருமை பற்றிப் பேச வந்த அவர்

*விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்*
*கற்றரோடு ஏனையவர்*

என்று, கல்வியில்லாதவர் விலங்கிற்கு ஒப்பர் என்று கடுமையாகக் கூறி வைக்கிறார்.

நம் முன்னோர் பொதுவாகக் கல்வியின் பெருமையை எனினும் அன்றைய சமுதாயத்தில் உணர்ந்திருந்தனர். அந்த அளவிற்கு எல்லோரும் கற்க வேண்டும் என்ற தத்துவம் பரவலாக இடம்பெற்றிருந்ததா என்பது கேள்விக் குறியே ஆகும். வள்ளுவர் குறளில் கல்வியின் முக்கியத்துவம் பொதுப்படையாகவே பேசப்படுகிறது. எனினும் பண்டைச் சமுதாயங்களில், இன்று நாம் Universal Education என்று கூறும் 'அனைவருக்கும் கல்வி' என்ற தத்துவம் இடம் பெறவில்லை. 'அனைவருக்கும் கல்வி' என்ற தத்துவம் இருபதாம்

நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில்தான் பரவலாக இடம்பெற்றது. கல்வி பற்றி நமது சமுதாயத்தின் அணுகுமுறை பற்றிக் கூற வந்த விவேகானந்த அடிகள் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

'ஒரு நாட்டில் கல்வியும் அறிவும் எந்த அளவிற்கு மக்கள் மத்தியில் பரவியிருக்கிறதோ அந்த அளவிற்குத்தான் அந்த நாடு முன்னேறுகிறது. இந்தியாவில் அழிவிற்குக் காரணம் நாம் இந்த நாட்டில் கல்வியையும் அதன் வழி அமைந்த அறிவுத்திறமையும் ஒரு சிலருடைய ஆதிக்கத்திற்குள்ளாவே வைத்திருந்ததுதான். நாம் மீண்டும் எழ வேண்டுமானால் கல்வியே மக்கள் மத்தியில் பரப்ப வேண்டும்'.

கல்வி இல்லாத இடந்தான் அடிமைத்தனத்தின் பிறப்பிடம். அநீதிகட்குப் புகலிடம். கல்லாத மக்கள் உண்மையான சுதந்திரத்தைப் பெறுவதில்லை. அவர்கள் கைகளிலிருந்து ஒரு விலங்கை அறுத்தெறிந்தால் இன்னொரு விலங்கை அணிபவர்கள். இந்த உலகில் ஏய்க்கும் கும்பல்கள் பல. அவற்றுள் ஒன்றின் ஆதிக்கத்திற்கு ஆளாபவர்கள். பாரதி அறியாமையை, அடிமைத் தனத்தின் வேராகக் கருதினார். அதை அடியோடு அழிக்க விரும்பினார். அவர் விலங்கு மாற்றத்தை விடுதலை என்று எண்ணியவர் அல்ல. எசமான மாற்றத்தைச் சுதந்திரம் என்று அவர் ஏமாந்ததில்லை.

தனிமனிதனின் சுதந்திரமும், நல் வாழ்வும் கல்வியின் மூலமே பெற இயலும் என்ற உண்மையை ஏறத்தாழ ஒரு நூற்றாண்டின் இறுதியில் நாம் காணும் நிலையை, இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே எதிர்பார்த்தவர். எனவே பாரதி;

*வீடு தோறும் கலையின் விளக்கம்*
*வீதி தோறும் இரண்டொரு பள்ளி*

*நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்*
*நகர்கள் எங்கும் பலப்பல பள்ளி*

தேவை என வேண்டுகிறார். இன்னும் ஒரு படி மேலே போய்,

*தேடு கல்வி யிலாத ஒரூரைத்*
*தீயினுக் கிரையாக மடுத்தல்*

வேண்டும் எனப் பிரகடனம் செய்கிறார். இன்று நாம் பரவலாகப் பேசும் செயற்பட்டும் அறிவொளி இயக்கத் தீபத்தை ஒரு நூற்றாண்டுக்கு முன்பே ஏற்றி வைத்தவர் பாரதி. சான்றோர்கள் தீர்க்கதரிசிகள். அவர்கள் கண்டவற்றைக் காண, புரிந்துகொள்ள, நமக்குக் கருத்தும் வேண்டும், கற்பனையும் வேண்டும்.

# சான்றோர் சிந்தனைகள்

## பயிற்றிப் பல கல்வி தந்து பாரை உயர்த்துவோம்

பாரதியின் கவிதைகள் அவரது உலக அனுபவத்தின் பிரதிபலிப்புகள்; அவரது எதிர்பார்ப்புகளின் எதிரொலிகள். கல்வி பற்றிப் பாரதியின் கருத்தைப் பார்ப்போம். பாரதி கல்வியை ஒரு பண்பாட்டுத் தேவையாக மட்டும் கருதவில்லை. அது ஒரு பொருளாதாரத் தேவை என்பதை உணர்ந்திருந்தார். கலைகள் ஆயிரமாயினும் அடிப்படையில் அவை மனித சமுதாயத்தின் தேசைகளைத் தீர்க்க வேண்டும். எனவே

*வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும்; இங்கு*
*வாழும் மனிதருக் கெல்லாம்*

'பலகல்வி' என்னும் அவரது பார்வை ஆழ்ந்து கருதத்தக்கது. கற்றவர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு; பிச்சை புகினும் கற்கை நன்று; அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும் என வாழையடி வாழையென நமது நாட்டில் பேசப்பட்ட கல்வி மரபன்று இங்கு பாரதியார் கூறுவது பல கல்வித் தத்துவம் நமது புலவர்கள் பாடாத ஒன்று. பல கல்வி வாய்ப்பு என்பது இன்றுகூட முழுமையாக நமது நாட்டின் கல்வித் துறையினர் படைக்காத ஒன்று. இரண்டாவதாக ஒழுக்கம் நீதி பற்றிப் பேசுவதற்கோ, கவிதையும், காவியமும் படைப்பதற்கோ, வெறும் பொழுதுபோக்குச் சாதனமாக இயங்கவோ மட்டும் பாரதி கல்வி பற்றிப் பேசவில்லை. சமுதாயம் உணவும், உடையும், உறையும் வீடும் பெறக் கல்வி வேண்டும் என்று கீழ்கண்டவாறு கூறுகிறார்.

'.............. இங்ஙனம் எல்லா வகுப்புகளையும் சேர்ந்த எல்லா மனிதரிடையேயும், கல்வியும், அதன் விளைவுகளாகிய பலவகைப்பட்ட அறிவுப் பயிற்சிகளும் பரவிவிடுமானால் அதனின்னும் தொழிலாளர்கள் கல்விப் பயணக் காவியங்கள் இயற்றுவதிலும் படிப்பதிலும் மாத்திரமே செலவிடும் வழக்கம் மாறிப்போய் அவரவர் தத்தமக்கு உரிய தொழில்களிலும் கல்வியறிவைப் பயன்படுத்தத் தொடங்குவார்கள். இதனின்றும் இதுவரை உலகத்தில் கைத் தொழிலாளர் பரம ஏழைகளாக இருந்து வரும் நிலைமை நீங்கி, மேம் மேலும் கைத் தொழிலாளருக்குள்ளே செல்வம் வளர்ச்சி பெற்றுவர ஏதுவுண்டாகும்'.

*அறிவே வலிமை; கல்வியே செல்வத்தின் தாய்*

காவியங்கள் எழுதுவதற்கு மாத்திரம் படிக்காமல் பலவகை வியாபாரங்களுக்கும், தொழில்களுக்கும் வேண்டிய படிப்புகள் படித்து, அவற்றை ஊக்கத்துடன் கையாளுவோருக்கு மேன்மேலும் செல்வம் பெருகும். ஆதலால் தொழிலாளர்களே கல்விப் பயிற்சி செய்யுங்கள் உங்கள் மக்களுக்கும் கல்வியறிவு மிகுவதற்குள்ள வழி செய்யுங்கள்.

அடிமைக்கு விடுதலை கல்வியால் வரவேண்டும். ஏழையின் ஏழ்மை கல்வியால் தீர வேண்டும். பெண்கள் தமது பெருமையைக் கல்வியால் அடைய வேண்டும். காணவேண்டிய வளர்ச்சிகள் அனைத்திற்கும் வழிகாட்டும் கண்ணும் கல்வி; வளர்ச்சியை உருவாக்கும் கருவியும் கல்வி என்றும் பாரதி கருதினார். முழுமையாக நம்பினார்.

அன்று, இன்றும் கூட யாரும் கல்வியையும் தொழிலையும் இணைக்காத அளவிற்கு பாரதி கல்வியையும் தொழிலையும் இணைக்கிறார். தொடர்பில்லாதவை போலத் தோன்றும் நுண்கலைகளையும் தொழில் நுட்பத்தையும் தொடர்பு படுத்துகிறார்.

*ஓவியம் செய்வோம்; நல்ல ஊசிகள் செய்வோம்*

ஓவியம் செய்வோம் என்றவர் அடுத்த மூச்சில் நல்ல ஊசிகள் செய்வோம் என்கிறார்.

*காவியம் செய்வோம் நல்ல காடு வளர்ப்போம்*

காவியம் செய்வோம் என்றவர் உடனே தொடர்ந்து நல்ல காடு வளர்ப்போம் என்கிறார். கலை வளர்ப்போம் என்றவர் கொல்லர் உலை வளர்ப்போம் என்கிறார்.

அவரது கல்வியில் காவியம் செய்வதும் இடம்பெறுகிறது. அதே முக்கியத்துடன் காடு வளர்ப்பதும் இடம்பெறுகிறது. 'ஓவியம்' செய்வதும் கற்பிக்கப்படுகிறது. ஊசிகள் செய்வதும் கற்பிக்கப்படுகிறது. இன்று நாம் பள்ளியிலும் பல்கலைக்கழகத்திலும் தொழில் கல்வி இடம்பெற வேண்டுமென்கிறோம். அதைக் கவிதை வடிவில் ஒரு நூற்றாண்டு முன்னரே பாரதி பாடுகிறார்.

மனித இனம் இந்த நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் சந்திரனில் கால் வைத்தது. அதற்கு வழிகோலுபவர் போல, அன்று சந்திர மண்டலத்தில் கண்டு தெளிவோம் என்றவர். அடுத்த வரியில் யாரும் எதிர்பார்க்காத அளவில் சாத்திரம் ஒன்றைக் கற்க வேண்டுமென்கிறார். காலம் காலமாக இழி தொழிலாகக் கருதப்பட்டு வந்த சந்திதெருப்

பெருக்கம் தொழிலை சாத்திரமாக உயர்த்தி, 'சந்தி தெருப்பெருக்கும்' சாத்திரம் கற்போம் என்கிறார். இவையனைத்தும் பாரதியின் பல கல்வித் தத்துவத்தின் பகுதிகள் அதன் விளக்கங்கள்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கல்வி, ஒரு நாட்டின் வளங்கள் அனைத்தினும் உயர்ந்த வளமாக உருப்பெற்றிருக்கிறது. கருவி அனைத்தினும் உயர்ந்த வளமாக வளர்ந்திருக்கிறது. கல்வி வளம் பெற்றோர் மற்ற இயற்கை வளங்கள் எது இல்லாவிட்டாலும் தமது கல்வியின் துணையால் இன்று ஈடுசெய்ய இயலும், வேளாண்மை யுகத்தில் தொடங்கி, தொழில் யுகத்தில் அடியெடுத்து வைத்து, தொடர்ந்து முன்னேறிவரும் மனித இனம், இன்று கல்வியுகத்தில் கால் வைத்திருக்கின்றது. இந்த வளர்ச்சியின் முழுப் பரிமாணத்தையும் பாரதி அன்று கண்டிருக்க முடியும் என்று நாம் கூறவில்லை. ஆனால் வாழ்வில் பயனுள்ளதும், தேவைகளோடு தொடர்புள்ளதுமான கல்வியின் திறனை அதன் தேவையை அதிசயிக்கதக்க அளவிற்கு அவர் உணர்ந்திருக்கிறார். பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டும் என்ற அவரது வேண்டுகோள் அன்றினும் இன்று பொருளுடையது; பொருத்தமானது.

# சான்றோர் சிந்தனைகள்

## நிதிமிகுந்தவர் பொற்குவைதாரீர்

நாம் விடுதலை பெற்று ஏறத்தாழ 50 ஆண்டுகள் ஆகின்றன. இந்தக் காலப் பகுதியில் நாம் பல மேம்பாட்டுத் திட்டங்களை, வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டிருக்கிறோம். இவற்றில் நாம் பெற்ற வெற்றிகளில் திருப்தி தருவனவுமுள. அவ்வளவாகத் திருப்தி தராதனவும் உள. முக்கியமான ஒரு உண்மையை நாம் இப்பொழுது தெளிவாக உணர்ந்துள்ளோம். மக்கள் நலனுக்காக, மக்கள் மேம்பாட்டுக்காக அரசு மேற்கொள்ளும் பணிகள், தீட்டும் திட்டங்கள் எவையாயினும், அதில், தொடக்கம் முதல் மக்கள் ஈடுபாடு தேவை; மக்கள் பங்கேற்புத் தேவை. அரசு தனது தறைகளின் மூலம், அவ்வப்பொழுது பிறப்பிக்கும் ஆணைகள் மூலம், ஒதுக்கும் நிதி மூலம் மட்டும் மேம்பாட்டுத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்துவது இயலாது. இந்த உண்மையை எல்லாத் துறையிலும் உணர்ந்திருக்கிறோம். எனினும் கல்வித் துறையில் பரவலாகவும் சிறப்பாகவும் இதை அறிந்து செயல்படத் தொடங்கியுள்ளோம். அதன் விளைவு தான் நமது அறிவொளி இயக்கம்.

கல்வி நீண்ட நாள் ஒரு சமுதாய சேவையாகவே கருதப்பட்டது. இன்று அது ஒரு ஊதியம் தரும் முதலீடாக அதாவது Investment-ஆகக் கருதப்படுகிறது. உலக வங்கியின் சில ஆய்வுகளின் படி, இடை நிலைப் பள்ளிக் கல்வியில் செய்யப்படும் முதலீட்டுக்கு . . . சதவிகிதம் வருமானமும், உயர்நிலைப் பள்ளிக் கல்வியில் செய்யப்படும் முதலீட்டுக்கு . . . . சதவிகிதம் வருமானமும் பெறக்கூடும் எனக் கூறப்படுகிறது.

நமது தலைவர்கள் கல்வியின் பண்பாட்டுத் தேவை, பொருளாதாரத் தேவை இரண்டையும் உணர்ந்திருந்தனர். எனவே நமது அரசியல் அமைப்பில் பத்து ஆண்டுகட்கும், அதாவது 1961-க்குள் 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகட்கு இலவச கட்டாயக் கல்வி அளிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டிருக்கின்றனர். இதை நிறைவேற்றும் வகையில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும் தொடர்ந்து ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும், பள்ளிக் கல்வியின் தற்குறித்தன்மையைக் குறைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருக்கிறோம். இருந்தும் நமது நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தோர் தொகை 1991 மக்கள் கணக்கெடுப்புப்படி 52 சதவிகிதம்தான். 1961-ல் அடைய வேண்டிய அதாவது பத்து வருடத்திற்குள் அடைய வேண்டிய, 6 முதல் 14 வயது வரை கட்டாய இலவசக் கல்வி

நிலையை ஏறத்தாழ 1/2 நூற்றாண்டைத் தாண்டியும் இன்று வரை நாம் அடையவில்லை. இதற்கு அடிப்படைக்காரணம் பெரிய மக்கள் இயக்கமாகச் செயல்பட்டிருக்க வேண்டிய ஒரு பணியை வழக்கமாக அரசுப் பணிபோல எண்ணியதும், அந்த அணுகுமுறையிலேயே செயல்பட்டதும்தான்.

மகாகவி பாரதியார் வாழ்ந்த நாடு, நூற்றுக்கு 90 பேர் போல எழுதப் படிக்கத் தெரியாதவர்களைக் கொண்ட நாடு. அன்றே பாரதி நாட்டு மக்கள் கல்விக் கண் பெற, மக்கள் சமுதாயம் முழுமையையும் திரட்டி இப்பணியில் ஈடுபடுத்த வேண்டும் எனக் கருதி இருக்கிறார்கள். ஆண்கள் பெண்கள் அனைவரும் இப்பணிக்கு உதவ வேண்டும் என்கிறார்.

தனது திட்டத்திற்கு முதல் படியாக நமது மக்கட்கு ஒரு புதிய உபதேசத்தை வழங்குகிறார். தர்ம சத்திரம் கட்டுதல், தண்ணீர்ப் பந்தல் வைத்தல், கோவில்கள் கட்டுதல், கும்பாபிஷேகம் செய்தல் ஆகியவையே புண்ணிய காரியங்கள் எனத் தலைமுறையாக நம்பி, நடந்து வந்த சமுதாயத்தை நோக்கி பாரதி ;

*அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்*
*ஆலயம் பதினாயிரம் கட்டல*
*அன்ன யாவினும் புண்ணியம் கோடி*
*ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்*

என்று பிரகடனம் செய்கிறார். இது உண்மையில் ஓர் புதிய செய்தி; புரட்சிகரமான செய்தி. நமது முன்னோர்கள் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று கூறினார்கள். ஆனால் பள்ளியில்லாத ஊர் பற்றிப் பேசவில்லை. பாரதியின் உள்ளத்தே தோன்றிய உண்மை ஒறி, வாக்கினிலே புது உபதேவமாகப் பிரதிபலிக்கிறது. இந்தப் பிரகடனத்தைச் செய்தபின் அவர் அத்துடன் நின்றுவிடவில்லை. இந்தப் பணிக்கு, 'சேரவாரும் செகத் தீரே' என எல்லோரையும் அழைக்கிறார்.

*நிதி மிகுந்தவர் பொற்குவைத்தாரீர்*
*நிதி குறைந்தவர் காசுகள்தாரீர்*
*அதுவு மற்றவர் வாய்ச் சொல் அருளீர்*
*ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்*

*மதுரத் தேமொழி மாதர்கள் எல்லாம்*
*வாணி பூசைக் குரிமன பேசீர்*
*எதுவும் நல்கி இங்கெவ் வகையானும்*
*இப் பெரும்பணி நாட்டுவம் வாரீர்*

என அழைக்கிறார். எதுவும் இயலாதவர் வாய்ச் சொல்லாவது அருளுங்கள் என்றதன் மூலம் எந்த அளவுக்கு இப்பணியில் எல்லோரும் ஈடுபட வேண்டும் என்பதை பாரதி வலியுறுத்துகிறார் என்பது விளங்கும். இது ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன் அன்றே நமது அரசு இன்றைய அறிவொளி இயக்கம் போல மக்கள் அனைவரையும் ஈடுபடுத்தும் அணுகுமுறையைக் கையாண்டிருந்தால் இருபதால் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் கூட, நூற்றுக்கு 45 பேர் போல எழுதப்படிக்கத் தெரியாதவர் என்ற நிலையில் இந்தியா இருந்திருக்காது. பாரதி பொழுதுபோக்குக் காவியம் எழுதவந்தவரல்லர். அவர் பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலிக்க வந்தவர். கவிஞர்கள் வெறும் மொழி வல்லுநர் மட்டும் அல்லர்; எதுகையும், மோனையும் கற்ற இலக்கணப் புலவர் அல்லர். கவிஞர் தத்துவ ஞானி; அனுபவத்தால் தற்காலத்தை உணர்ந்தவர்; தீர்க்கமான பார்வையில், கற்பனையில் வருவனவற்றைக் கணிப்பவன் ; எனவே தான் பாரதி; கல்வியைப் பற்றி எண்ணும் பொழுது

*எதுவும் நல்கி இங்கெவ்வகை யானும்*
*இப்பெரும் பணி நாட்டுவம் வாரீர்*

என அனைவரையும் அழைத்தார். பாரதியின் அந்த அழைப்பு அன்றும் பொருத்தமுடையது; இன்றும் அன்றிலும் பொருத்தமுடையது.

# சான்றோர் சிந்தனை

## ஆள்வினை உடைமை

மனிதன் சிந்திக்க தொடங்கிய காலத்திலிருந்து, அவனது வாழ்வின் வெற்றி தோல்வியை, உயர்வு தாழ்வைப் பாதிக்கும் இரு சக்திகள் பற்றிய விவாதம், கருத்துப் பரிமாற்றம், கருத்து வேற்றுமை இருந்தே வந்திருக்கிறது. அவையாவன :

1. ஊழ்வினை அல்லது விதி
2. ஆள்வினை அல்லது முயற்சி

இந்த இரண்டின் முக்கியத்துவம் பற்றி, இவற்றின் வலிமை, வலிமைக் குறைவு பற்றி எண்ணற்ற தத்துவங்கள், விளக்கங்கள் உருவாகியுள்ளன. ஊழ்வினை, தலைவிதி என்பதை நம்பாதவர்களும் இருக்கிறார்கள். எனினும் பலர், ஏதாவது ஒரு வகையில், வாழ்க்கையில் சில நிகழ்வுகள் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன என்பதில் கூடவோ, குறையவோ, நம்பிக்கை உள்ளவர்களாகவே இருக்கிறார்கள். இந்த நம்பிக்கையில், கற்றவர்கட்கும், கல்லாதவர்கட்கும் பெருத்த வேறுபாடு இல்லை. பயன்படுத்தும் மொழி வழக்கு, சொல் நயம் வேறாக இருக்கலாம். ஆனால் அடிப்படையில் வேற்றுமை இல்லை, அறிவியலறிஞர்களும், அதாவது விஞ்ஞானிகளும் இதற்குப் புறம்பானவர்கள் அல்லர். முன்னிறிய மேலை நாடுகளிலும் சரி, முன்னேறிக் கொண்டிருக்கும் நாடுகளிலும் சரி, செய்தித் தாள்களில் வார பலன், அல்லது மாத பலன் வருவது சாதாரண நடைமுறையாகிவிட்டது. 'நம்பிக்கையில்லை' என்று சொல்பவர்களும் இவற்றைப் படிக்கிறார்கள்.

வள்ளுவர் உலகியலை அறிந்தவர். அவர் பொதுவாக வாழ்வியலை வகுக்க முன்வந்தவர். எனவே, அவர் 'ஊழ்வினை', 'ஆள்வினை', இரண்டையும் கருத்திற்கொண்டு, தனித் தனியாக, 'ஊழ்', 'ஆள்வினையுடைமை' என இரண்டுக்கும் தனித்தனியே முழு அதிகாரம் வகுத்திருக்கிறார். அவரைப் பொருத்தவரை, ஊழில் நம்பிக்கை உடையவராகவே தோன்றுகிறார்.

*வகுத்தான் வகுத்தவகையல்லால், கோடி*
*தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது*

என அறிதியிட்டுக் கூறுகிறார். கோடியெனக் கணிக்கத்தக்க அளவில் செல்வத்தைக் குவித்து வைத்திருந்தாலும், அவற்றை அனுபவிப்பதும், அனுபவிக்க இயலாமற் போவதும், அவரவர்

ஊழைப் பொருத்தது; அதாவது, விதியைப் பொருத்தது. இதே அடிப்படைக் கருத்தை, அல்லது இதையொத்த கருத்தையே, 'ஊழ்' என்ற அதிகாரத்தில், வெவ்வேறு வழிகளில், வெவ்வேறு நிலைகளில் விளக்குகிறார்.

ஊழ் அவ்வளவு வலியுடையது என்பது பற்றிய அவரது கருத்தை ஏற்றுக்கொள்வோமாயின் பின்னர் முயல்வதன் பயன் என்ன. ஆள்வினையால் அடைவது என்ன, என்ற கேள்வி எழுகிறது. ஊழ்வினையை நம்பும் உலகத்தாருக்கு வள்ளுவர் ஆள்வினையின் ஆற்றல் பற்றிப் பேசுகிறார். ஊழ்வினை சாதகமாக இருந்து, அத்துடன் ஆள்வினையும் சேரும்பொழுது வெற்றி எளிதாகிவிடுகிறது. பெ ரிய பிரச்சினையோ, தத்துவ விசாரணையோ தேவையில்லை. இவை ஒன்றுக்கொன்று எதிராக நிற்கும்பொழுது தான் பிரச்சினை எழுகிறது. வள்ளுவர் அப்படிப்பட்ட ஒரு நிலையையும் மனதடல் நிறுத்தித் தீர்வு காண்கிறார். சில கருத்துக்களை ஐயந்திரிபு அற எடுத்து வைக்கிறார்.

*பொறியின்மை யார்க்கும் பழியன்று; அறிவறிந்து*
*ஆள்வினை இன்மை பழி*

என்கிறார். விதி தனக்குச் சாதகமாக இல்லாது, அல்லது பேச்சு வழக்கில் கூறுவதானால், 'அதிர்ஷ்டம் இல்லாமை' யாருக்கும் ஒரு குற்றமாகாது. விதியென ஒன்று இருக்குமாயின், அது நாம் உருவாக்கிக் கொண்டது அல்ல. உருவாக்கக் கூடியதும் அன்று. எனவே ஒருவருக்கு அது குற்றமாகாது. ஆனால், முயன்று வினை செய்யாமை ஒருவருக்குக் குற்றம் ஆகும். அதைப் 'பழி ஆகும்' என்றே வள்ளுவர் கூறுகிறார்.

விதி நமக்கு எதிராக அமைந்தபொழுது, முயன்று என்ன பயன், என்ற ஐயம் எழலாம். அதன்வழி பல கேள்விகளும் எழலாம். இந்தச் சிக்கலை வள்ளுவர் எண்ணிப் பார்க்கிறார். இந்த இரண்டு சக்திகளையும், அவற்றின் வலிமையையும் சீர்தூக்கிப் பார்த்துச் சிந்திக்கிறார். பின்னர், முடிந்த முடிப்பாக,

*ஊழையும் உப்பக்கம் காண்பர்; உலைவின்றித்*
*தாழாது ஊற்று பவர்*

என்கிறார். சோல்வில்லாது முயற்சி செய்பவர்கள், ஊழையும் புறங்காணச் செய்வர்; தோற்கச் செய்பவர் என்கிறார். மனித சமுதாயத்தினை அன்றும் இன்றும் முன்னோக்க நிற்கும் ஒரு முக்கியமான கேள்விக்கு, ஒரு பெரிய புதிருக்கு, வள்ளுவர் சுற்றி வளைக்காது, நேரடியாகப் பதில் கூறுகிறார்.

*ஊழ் வலியதே ஆகும்; ஆயினும்*
*சோர்விலாத முயற்சி அதையும் வெல்லும்*

என்கிறார். இதே கருத்தை இன்னும் சற்றுத் தெளிவாகவே இன்னொரு குறளில் வலியுறுத்துகிறார்.

*தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்*
*மெய்வருத்தக் கூலி தரும்*

கடவுள் அருளால், அந்த அருளின் வலிமையால் செய்து முடிக்க இயலாத அரும் பணியானினும், உடலை வருத்தை வினை செய்யும் முயற்சியுடையார் தமது முயற்சிக்கு ஏற்ற பயனைப் பெறுவர். அதை யாராலும் தடுக்க முடியாது. எனவே வள்ளுவர் கூறும் வாழ்வியலில், முயற்சி திருவினையாக்கும்; சோர்விலாத முயற்சி, விதியையும் வெல்லும். முயல்வது நமது கடன். ஆள்வினையுடைமை மனித சமுதாயத்தின் வெற்றிக்கு அடிப்படைச் சக்தி. செயலுக்கு முயற்சி தான் ஆத்மா. எனவே வள்ளுவர்

*அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்*
*பெருமை முயற்சி தரும்*

என்கிறார். இவ்வளவு பெரிய காரியமாயிற்றே என ஒருவர் மனந்தளர்வது கூடாது. முயற்சியே ஒருவருக்கு, ஒரு காரியத்தை முடிக்கும் தகுதியை, உயர்நிலையைக் கொடுக்கும்.

பெருமை முயற்சிதரும் ; இது வள்ளுவர் வாக்கு.

# சான்றோர் சிந்தனை

## செயல் வேண்டும்

மனிதனுடைய உடல் வேண்டுமானால் எலும்பாலும், தசையாலும், நரம்பாலும் ஆகியிருக்கலாம். ஆனால் மனிதனின் வாழ்வு இவற்றால் ஆனது அன்று. மானிட வாழ்வு காலத்தால் ஆனது. மனிதனைப் பொருத்தவரை, காலம் நாட்களால், வாரத்தால், மாதங்களால் அளக்கப்படுவதல்ல. அது செயல்களால் அளக்கப்படுவது. எனவே, ஒருவனுடைய வாழ்வை மதிப்பிடும்பொழுது, அவர் எவ்வளவு நாள் வாழ்ந்தார் என்பதைவிட, என்ன சாதித்தார் என்பது முக்கியம். இதைத் தான் கவிஞன்,

*அரைநொடியும் பொற்காலம் ஆதல் கூடும்*
*ஆண்டுபல இரவுகள்போல் அகலக்கூடும்*

என்கிறான். மனித சமுதாயத்தின் முன்னேற்றப் பயணத்தில் வறிதே கழிந்த நூற்றாண்டுகளும் உண்டு. வரலாறு படைத்த நிமிடங்களும் உண்டு. செயலை, வினை முடிப்பதை அடிப்படையாக வைத்துத் தான் வள்ளுவர்

*பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்*
*கருமமே கட்டளைக் கல்*

என்கிறார். செயலே அளவுகோல்; ஒருவருடைய பெருமையோ, அல்லது பெருமை இல்லாத சிறுமை நிலையோ, செல்வத்தால் வருவதில்லை ; பதவியாலும் வருவதில்லை ; முடிவாக அது ஒருவருடைய செயலால் வருகிறது. வள்ளுவம் மனித சமுதாயத்திற்குச் செயலின் பெருமை பேசும் திருமறை.

மனித சாதி தோன்றியதிலிருந்து, வறுமை, மனித சமுதாயத்தை நீங்கா நிழல்போலத் தொடர்ந்து வருகிறது. இந்தியாவைப் பொருத்த வரை, இங்கு இரு துருவ நிலை. இது வளம் நிறைந்த நாடு; ஆனால் இங்கு வறுமையில் வாடும் மக்கள். இதற்குப் பல காரணங்கள் கூறலாம். அவற்றுள் ஒன்று, நம்மிடம் காணும் ஒரு குறைபாடு பெரிய குறைபாடு; அது தான் செயலில் ஊக்கமின்மை. வள்ளுவர், 'இல்லையே, என்று வருந்துபவர்களைப் பார்க்கிறார். அவர்களுடைய இல்லாமை, அவர்களே உருவாக்கிக் கொண்டது; அவர்களது செயலின்மையால் வந்தது. எனவே, வள்ளுவர் கூறுகிறார்,

*இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்*
*நிலம்என்னும் நல்லாள் நகும்*

என்கிறார். ஒரு தொழிலும் செய்யாது, உடலை வருத்தாது, சோம்பல் பொங்க இருந்துகொண்டு, 'யாம் வறியவர்கள்' என்று வருந்துபவர்களைப் பார்த்து, நிலம் என்னும் நங்கை, என்னிடத்தில் எல்லாச் செல்வமும் இருக்கிறது. எடுத்துப் பயன்படுத்த உழைப்பு வேண்டும். அதற்குத் தயாராக இல்லாத சோம்பேறிகள் தான் 'இல்லையே' என வருந்தும் இந்த ஏழைகள் என்று எண்ணி, கேலியாகச் சிரிக்கிறாள் என்கிறார் வள்ளுவர். இங்கு உடல் உழைப்பின் உயர்வு பேசுகிறார்.

பண்டைத் தமிழ் மரபு, பண்டைத் தமிழ்ப் பண்பாடு, ஈதலை மிகவும் பெருமைப்படுத்துகிறது, பாராட்டுகிறது. தேவையான ஒரு பண்பாக ஏற்கிறது. அதைப் போலவே, விருந்தோம்பலும் பாராட்டப்படுகிறது. ஆனால், 'விருந்தோம்பல்' வேறு, 'ஈதல்' வேறு. வள்ளுவரும் ஈதலைச் சிறப்பிக்கிறார். என்றாலும், அவர் காலப் புலவர்களில் மற்ற எல்லோரையும் விட, 'இரத்தலை', 'இரந்து வாழ்தலை'க் கடுமையாகக் கண்டிக்கிறார்.

*ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு*
*இரவின் இனிவந்தது இல்*

ஒரு பசுவைக் காப்பது, அன்று பெரிய அறமாகக் கருதப்பட்டது; இன்றும் கருதப்படுகிறது. பொதுவாகத் தண்ணீர் விலை கொடுத்து வாங்கும் பொருளாக எண்ணப்படுவதில்லை. காப்பாற்றப்பட வேண்டிய உயிராகிய ஒரு பசுவுக்கு, பொருள் கொடுத்து வாங்காது இனாமாகப் பெறும் நீரைக் கூட, கேட்டு வாங்குவது, கேட்ட நாவுக்கு இழிவு சேர்க்கும் என்கிறார். இங்கும் அவர் செயலின் முக்கியத்துவத்தை, உழைப்பின் மேன்மையை வலியுறுத்தும் வகையில் ;

*தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தான்தந்தது*
*உண்ணலின் ஊங்குஇனியது இல்*

என்கிறார். தெளிந்த நீர் போன்ற எளிய கூழ் தான் என்றாலும், தானே உழைத்துச் சம்பாதித்துக் குடித்தால், அதைவிட இனியது வேறொன்றும் இல்லை என்கிறார். வள்ளுவர், அவர் பேசும் பொருள் எதுவாயினும், இயன்ற இடங்களில் எல்லாம், மனிதன் செயலாற்ற வழி வகுக்கிறார். செயலை வற்புறுத்துகிறார். தேவைகளைத் தீர்க்க அதுவே அவரது தாரக மந்திரம்.

*செயல் வேண்டும்; வினைகோடி செய்யத் தூண்டும்*
*திறன் படைத்த கலை வேண்டும்*

என்பர் தற்காலக் கவிஞர்கள். வள்ளுவம், ஒவ்வொரு கட்டத்திலும், வினை செய்யத் தூண்டும் நூல். ஒவ்வொரு குறளும், செயலுக்கு வழி வகுப்பது; நமது சமுதாயம் உடலுழைப்புக்கு உயர்வு தராத சமுதாயம். அன்றும் சரி, இன்றும் சரி, இந்தக் கூறுபாடு நமது பண்பாட்டிலிருந்து

மறையவில்லை. அப்படிப்பட்ட சமுதாயத்தில் வள்ளுவர் செயலை, உடலுழைப்பை, அவர் காலச் சிந்தனையாளர்கள் யாரும் வலியுறுத்தாத அளவிற்கு வலியுறுத்தியிருக்கிறார். யாரும் போற்றாத அளவிற்குப் போற்றியிருக்கிறார். சிந்தனை, செயல், இவற்றால் ஆனது மனித வாழ்க்கை; சிந்தனையும் செயல் தான். எனவே, வாழ்வின் தரமும், மாற்றும் செயலைப் பொறுத்தது. வெற்றியும் தோல்வியும் செயலின் திறத்தைப் பொறுத்தது. வள்ளுவம் செயலின் பெருமை பேசும் திருமறை.

*பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்*
*கருமமே கட்டளைக் கல்*

அதாவது, செயலே உரைகல்.

# சான்றோர் சிந்தனை

## செயற்கரிய செய்வர் பெரியர்

ஒரு மனிதன் உயர்வும் தாழ்வும், பெருமையும் சிறுமையும் அவனை ஆட்கொண்டு செயலுக்குத் தூண்டும் குறிக்கோளைப் பொருத்தே இருக்கிறது. ஒரு உயர்ந்த குறிக்கோளுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவன், தான் ஏற்றிருக்கும் பணிக்கு ஏற்ப, குறிக்கோளுக்கு ஏற்பத்தான் வளர்கிறான். தான் உயர்கிறான். பிறப்பில் செல்வம் வரலாம்; வாழ்வின் சில வசதிகள் வரலாம்; ஆனால் உயர்வும் தாழ்வும், பெருமையும் சிறுமையும் பிறப்பில் வருவதில்லை.

ஒரு மனிதன் அடையத்தக்க உயர்வுக்கு எல்லை எது, என்ற கேள்வியை எழுப்பி வள்ளுவர், அவனது ;

*உள்ளத் தனையது உயர்வு*

என்கிறார். அவனது உயர்வுக்கு எல்லை வகுப்பது வேறு யாருமில்லை; வெளியில் யாருமில்லை. அது அவனது உள்ளம் தான். இங்கு 'உள்ளம்' என்பது எதைக் குறிக்கிறது, என்ற கேள்வி எழும். இங்கு 'உள்ளம்' என்பது, அதன் சக்தியை நிர்ணயிக்கும் ஊக்கம். தனி மனிதனின் ஊக்கம் என்பது தனியாக வெற்றிடத்தில் நிற்கும் பண்பு அன்று. அது ஒரு முயற்சியோடு, செயலோடு இணைந்தது. முயற்சியின் வழி, செயலின் வழி தான் ஊக்கம் இயங்குகிறது. செயலுக்கு, முயற்சிக்கு ஒரு குறிக்கோள் வேண்டும். எனவே திருவள்ளுவர் ;

*உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்*

என்கிறார். நாம் செய்ய நினைப்பது எதுவாயினும் அது உயர்ந்ததாகவே இருக்க வேண்டும். பொதுவாக அது உடனே கைகூடாவிடாலும், அதைப்பற்றித் தொடர்ந்து எண்ண வேண்டும், முயல வேண்டும். பாரதி கூறுவார் ;

*ஆழ்ந்த நெஞ்சகத்து ஆசை இன்றுள்ளதேல்*
*அதனுடைப் பொருள் நாளை விளைந்திடும்*

ஒரு குறிக்கோளை அடைய வேண்டும் என்னும் ஆசை நமது உள்ளத்தின் ஆழத்தில் உறுதிப்பட்டு இன்று இருக்குமாயின் அது இன்று இல்லாவிட்டாலும் நாளை நிறைவேறும்.

*புலன்களோடு கரணமும் ஆவியும்*
*போந்து நின்ற விருப்புடன் மானிடன்*
*நலன்களேது விரும்புவன் ஆங்கிவை*
*நண்ணிடைப் பெறல் திண்ணம்*

என்பான் பாரதி.

தனி மனிதனின் வாழ்வில், எந்த ஒரு சாதனையும் நிகழவேண்டுமாயின், இரு அம்சங்கள் இணைய வேண்டும். ஒன்று, திறமை; இன்னொன்று, ஒரு குறிக்கோளை நிறைவேற்றுவதற்குரிய வாய்ப்பு. எவ்வளவு திறமை இருந்தாலும், அதற்கேற்ற வாய்ப்பு வேண்டும். கிரிக்கெட் விளையாட்டு இருக்கிறது. அதில் சிறந்தவர்கள் தேசிய அளவில் புகழ் பெறுகிறார்கள். ஆனால் அதே கிரிக்கேட் வீரர், அந்த விளையாட்டே இல்லாத ஐரோப்பாவிலோ, அமெரிக்காவிலோ எந்தச் சிறப்பையும் பெற இயலாது. திறமை உருவம் பெற வாய்ப்பு வேண்டும். அதே சமயம், திறமை இல்லாதவர்கட்கு வாய்பினால் பயன் இல்லை.

திறமை உள்ளவர்களாயினும், வாய்ப்புப் பொதுவாக அவர்களைத் தேடி வந்து முன் நிற்பதில்லை. வாய்ப்புகளை, வாய்ப்புகட்கான சூழ்நிலைகளைக் கவனமாக நோக்க வேண்டும். இங்கு பேகனுடைய ஒரு கருத்தை கூற வேண்டும். "அதிர்ஷ்டத்திற்குக் கண் இல்லை என்கிறோம் ; சரி அது உண்மையாக இருக்கலாம். ஆனால் அதிர்ஷ்டம் கண்ணுக்குத் தெரியாததல்லவே; அதை நாம் தேடி அடையலாம்". சில சமயங்களில் பல காரணங்களால், மிகப் பெரிய வாய்ப்பு உருவாகலாம். அதைக் காணும் விழிப்புணர்வு வேண்டும்; பார்வை வேண்டும். அதை முறையாக, முழுமையாக நாம் பயன்படுத்திக் கொள்ளும் திறன் வேண்டும்.

*எய்தற்கு அரிது இயைந்தக்கால், அந்நிலையே*
*செய்தற்கு அரிய செயல்*

என்பார் வள்ளுவர். வாய்ப்பு என்பது ஒரு வரம் போன்றது. அதிலும், அரிய வாய்ப்பு என்பது பெறுதற்கரிய பெரு வரம் போன்றது. அப்படிப்பட்ட சமயம் வருகின்ற வாய்ப்பைக் கருத்துடன் காண வேண்டும். அதை நழுவ விடாது பயன்படுத்த வேண்டும். வாய்ப்பின் தகுதியை முழுமையாகப் பயன்படுத்தி அதன் வழி, சாதாரணமானவர்களோ, அல்லது யாராயினும் சாதாரண நிலையிலோ, செய்வதற்கு அரிதான செயல்களைச் செய்து முடிக்க வேண்டும் என்பார் வள்ளுவர். அவர் காட்டும் பாதையின் திசை, அவர் கூறும் பயணத்தின் குறிக்கோள்;

*செயற்கரிய செய்ய*

முயல வேண்டும் என்பது தான். இங்கு 'செயற்கரிய' என்பது பற்றி ஒரு கருத்துக் கூற விரும்புகிறேன். 'செயற்கரிய' என்பது, ஏதோ பெரிய பொறுப்புகளில் இருப்பவர்கட்கு, உயர்ந்த நிலையில் இருப்பவர்கட்கு மட்டும்தான் என்பதில்லை. அந்த ஆசை எல்லோருக்கும் இருக்கலாம்.

இமயத்திற்குத் தான் எவரெஸ்ட் இருக்கிறது என்பதில்லை. எல்லா மலைக்கும் சிகரம் இருக்கிறது. அவரவர், அவரவர் பணியில், கடமையில், செயற்கரிய செய்ய முயல வேண்டும். தன் பணியில் சிறந்தன செய்தார் யாராயினும் உலகம் தலை வணங்கும். வாழ்வில் எய்தற்கரிய வாய்ப்பு எய்துமாயின், அதுவே சமயமென்று உணர்ந்து செய்தற்கரிய செய்ய முயல வேண்டும். 'செயற்கு அரிய செய்வர் பெரியர்'. எனவே, 'பெரியர்' தான் செயற்கரிய செய்பவர் என்றில்லை, செயற்கரிய செய்பவர் யாராயினும் அச் செயல்வழி பெரியராகிறார். இது எத்தொழிலுக்கும் பொருந்தும். எனவே, பெரிய ஆசைகள் அனைவருக்கும் பொது. நமது கனவுகள் உயர்ந்தனவாக இருக்க வேண்டும். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல், செயற்கரிய செய்யும் ஆசையும் அனைவருக்கும் பொருந்தும்; அனைவருக்கும் வேணடும்.

# எல்லோருக்கும் கல்வி

இன்று செப்டம்பர் ஐந்தாம் நாள்; இது ஆசிரியர் தினம். ஆசிரியராகத் தமது வாழ்க்கையைத் தொடங்கி, இந்த நாட்டின் பதவிகளில், பொறுப்புகளில் தலையாயதான குடியரசுத் தலைவர் பதவிக்கு உயர்ந்து, அப்பதவிக்கு உயர்வு சேர்த்த தத்துவ மேதை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் பிறந்த நாள். ஆசிரியர் தினமாகிய இன்று, கல்வி பற்றி நாம் நினைவு கூர்வது பொருத்தமானதாகும். நமது முன்னோர்கள் கல்விக்குத் தொடர்ந்து முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கின்றனர். தமிழ்ச் சமுதாயம் மிக இழிந்த செயலாகக் கருதியது பிச்சை எடுப்பது; ஈன்ற தாயின் பசி தீர்க்கக்கூட இரப்பதைச் சான்றோர் பழிக்கும் செயல் என்பார் வள்ளுவர். இப்படிப்பட்ட ஒரு மான உணர்வைத் தனது பண்பாகக் கொண்ட தமிழ்ச் சமுதாயத்தில்;

*கற்கை நன்றே; கற்கை நன்றே*
*பிச்சை புகினும் கற்கை நன்றே*

என்ற அறிவுரையும் இடம் பெற்றிருக்கிறது. கல்லாதவர்கள் விலங்குக்கு ஒப்பானவர்கள். எனவே கற்பதற்குப் பிச்சை எடுத்தாலும் பரவாயில்லை என்ற விதிவிலக்கு அளிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் கல்வி ஒரு ஆபரணமாக, பண்பாட்டு தேவையாக, நாகரிகச் சின்னமாக இருந்ததேயன்றி, அது அன்றாட வாழ்வுக்கு அவசியமான ஒன்றாக, ஒரு பொருளாதாரத் தேவையாக, பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாக இருக்கவில்லை. ஆனால் இன்று, கல்வி ஒரு பொருளாதாரத் தேவையாக வளர்ந்து விட்டது. இந்தியச் சமுதாயம் தொன்றுதொட்டு ஒரு சிலரே கல்வி கற்ற சமுதாயமாக நீண்ட காலம் இருந்து வந்திருக்கிறது. ஆனால் இன்றைய உலகில் தேவைப்படுவது அனைவரும் கல்வி கற்ற சமுதாயம்.

இன்று உலகம் இரண்டு பெரிய பிரிவுகளாகப் பிளவுபட்டு நிற்கிறது. ஒரு பக்கம் முன்னேறிய நாடுகள். அவை செல்வம் நிறைந்தவை. இன்னொரு பக்கம் முன்னேறிக் கொண்டிருக்கும் நாடுகள். அவை ஏழ்மையில் வாடுபவை. முன்னேறிய நாடுகளில் வாழும் 23 சதவிகித மக்கள் உலகத்தின் 80 சதவிகித இயற்கை வளங்களை அனுபவிக்கிறார்கள். மீதமுள்ள 77 சதவிகிதத்தினர்க்குக் கிடைப்பது 20 சதவிகித வளங்கள் தான். இதனினும் கொடுமையானது, உலக மக்களில் அடித்தளத்தில் இருக்கும் மிக ஏழைகளான 20 சதவிகித மக்கள் உலக வருமானத்தில் 1.4 சதவிகிதத்தை மட்டுமே பெறுகிறார்கள். இந்த அவலத்திற்கு,

வேறுபாட்டுக்குக் காரணம், நிலப்பரப்பு அன்று; இயற்கை வளங்கள் அன்று; மக்கட் தொகை அன்று; மதமோ, மொழியோ அல்ல. அந்த நாடுகள் அடைந்திருக்கும் கல்வி நிலை தான். அதில் முக்கியமானது அனைவரும் கல்வி பெற்றிருப்பதாகும். அனைவருக்கும் கல்வி என்பதில் நாம் மற்ற ஆசிய நாடுகளை விடவும் பின்தங்கிவிட்டோம். எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் சதவிகிதம்: இலங்கையில் 88.4, மலேசியாவில் 78.4, தாய்லாந்தில் 93.0, சைனாவில் , இந்தோனேசியாவில் 81.6, ஆனால் இந்தியாவில் 52.2 தான். இந்த விஞ்ஞான உலகின் தேவையை உணர்ந்த ஞானியாகிய விவேகானந்தர் நமக்கு 100 ஆண்டுகட்கு முன்பே ஓர் அறிவுரை கூறினார்:

> ஒரு நாட்டின் முன்னேற்றம் அதன் மக்களிடையே எந்த அளவிற்குக் கல்வியும் மதிநுட்பமும் பரவியிருக்கிறது என்பதைப் பொறுத்திருக்கிறது. இந்தியாவின் தாழ்வுக்கும் அழிவுக்கும் முதற்காரணமாக இருந்தது கல்வியும் மதிநுட்ப வளர்ச்சியும் ஒரு சிலர் ஆதிக்கத்துள்ளேயே இருந்துவிட்டது தான். நாம் மீண்டும் தலையெடுக்க வேண்டுமானால் மக்களிடையே நாம் கல்வியைப் பரப்ப வேண்டும். கீழ் மட்டத்தில் இருப்பவர்கட்கு நாம் செய்யக்கூடிய ஒரே உதவி. அவர்கட்குக் கல்வி தருவது தான்.

எல்லோரும் கல்வி பெறவேண்டிய தேவையை ஒரு நூற்றாண்டுக்கு முன் வற்புறுத்திய சான்றோர் விவேகானந்தரின் வேண்டுகோளை நாம் இன்றுவரை நிறைவேற்றவில்லை. இன்றிலிருந்து சுமார் முக்கால் நூற்றாண்டுக்கு முன் பாரதி, அவருக்கே உரிய உணர்ச்சி பொங்கும் மொழியில், ஏழைகள் கல்வி பெற வேண்டியதன், அனைவரும் கல்வி பெற வேண்டியதன் இன்றியமையாமையைப் பற்றிப் பேசுகிறார்,

*இன்னருங்கனிச சோலைகள் செய்தல்*
*இனியநீர்த் தண்சுனைகள் இயற்றல்*
*அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்*
*ஆலயம் பதினாயிரம் நாட்டல்*

இவையனைத்தையும் குறிப்பிட்டு, ''அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'' என்றார். அரசன் முதல் ஆண்டி வரை ஆலயம் கட்டுவது புண்ணியமான செயல் என்று நம்பிய நாட்டில் ஆலயம் பதினாயிரம் நாட்டுவதை விட ஒரு ஏழைக்கு எழுத்தறிவிப்பது புண்ணியமானது; 'புண்ணியம் கோடி' என்கிறார். இதை அரசு மட்டுமே செய்துவிட முடியாது என்று அஞ்சியோ என்னவோ, பொது மக்கட்கு வேண்டுகோள் விடுக்கிறார்.

*நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்*
*நிதிகுறைந்தவர் காசுகள் தாரீர்*
*அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்*
*ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்*

என்று மக்களை அழைக்கிறார். கல்லாத சமுதாயத்தின் மீது தனக்கு ஏற்படுத்தும் கோபத்தை வெளிப்படுத்த:

*தேடுகல்வி யிலாத ஒருரைத்*
*தீயினுக்கிரையாக மடுத்தல்*

என்று ஆவேசம் பொங்கப் பேசுகிறார். அவருடைய அளவுகோலை வைத்து ஊர்களைத் தீக்கு இரையாக்குவதெனின் இந்தியாவில் பாதி ஊர்கள் அழிந்துவிடும். இந்தச் சான்றோரின் எண்ணத்தை நிறைவேற்றத் தவறிய நாம், எச்சரிக்கையைப் புரிந்துகொள்ளத் தவறிய நாம், போட்டி நிறைந்த இந்த உலகில் பொருளாதார வளர்ச்சியில் முழுப் பங்குகொள்ள இயலாதவர்களாக இருக்கிறோம். உலக வங்கியின் கணக்குப்படி, 1960 முதல் 1975 வரையிலான காலப் பகுதியில் உலகத்தின் மொத்த உற்பத்தி இரண்டு மடங்காகியது. ஆனால் இதன் பயன் பெரும்பாலான 90 சதவிகிதத்திற்கும் அதிகமாக எழுத்தறிவு பெற்ற நாடுகட்கே சென்றுவிட்டன. முப்பது சதவிகிதத்திற்குக் கீழ் இருந்த நாடுகட்கு எந்தப் பங்கும் போய்ச் சேரவில்லை. ஆசிரியர் தினமான இன்று, அனைவருக்கும் கல்வி என்பதன் தேவையை நீண்ட நாட்கட்கு முன்னமே வற்புறுத்திய சான்றோரின் அறிவுரைகளை நினைவு கூர்வது பொருத்தமாகும். இந்தப் பணியில் சமுதாயத்தில் அனைவரும் - நிதி மிகுந்தவர், நிதி குறைந்தவர், அதுவுமற்றவர், ஆண்மையாளர், மதுரத் தேன்மொழி மாதர் அனைவரும் ஈடுபடுவோமென உறுதி கொள்வோமாக.

# மனிதர் தம்மை அமரர்களாக்குவோம்

மனிதன் இன்றிருக்கும் நிலையிலேயே படைக்கப்பட்டவன் அன்று. அவன் ஒரு வகையான குரங்கினத்தினின்று படிப்படியாக, மிக நீண்டகால வளர்ச்சிக்குப் பின் இந்நிலையை அடைந்திருக்கிறான். இதை ஆங்கிலத்தில் Evolution என்கிறோம். தமிழில் பரிணாம வளர்ச்சி என்கிறோம். பலர் மனிதனின் இந்த மேம்பாட்டு வளர்ச்சி முற்றுப் பெற்றுவிட்டதாக நினைக்கிறார்கள். ஆனால் அது முற்றுப் பெறவில்லை. அது தொடர்ந்து நிகழும் ஒன்று. Man is still evolving என்கிறார் தத்துவ மேதை டாக்டர் இராதாகிருஷ்ணன். பரிணாம வளர்ச்சியில் மனிதன் தொடர்ந்து மேம்பாட்டு நிலைக்கு வளர்ந்து கொண்டே இருக்கிறான். தந்தையினும் மகன் மானிடத் தரத்திலும், தகுதியிலும் ஒரு படி உயர்ந்தவன். இது நாம் அளக்க முடியாத அளவுக்கு நுண்ணிதினும் நுண்ணியமான மாற்றம். கண்ணுக்குத் தெரியாதது. கருத்திற்குப் புலப்படாதது. ஒரு தலைமுறையிலோ, இரு தலைமுறையிலோ உணர இயலாதது. ஆனால் தொடர்ந்து நடைபெற்று வருவது. எனவேதான், கவிஞன்,

*மலையாது முன்னேறிச் செல்வோம்: மனித*
*வாழ்வு முடிவில்லாத முன்னேற்றப் பயணம்*

என்கிறான். இந்த முன்னேற்றம் அவனது புற வாழ்வில் மட்டும் அன்று. இது அவனுக்குள்ளே அவனறியாது நடைபெறும் ஒன்று. தொடர்ந்து நிகழும் ஒன்று.

நமது முன்னோர்கள் 'தேவர்கள்' என ஒரு பிரிவினர் இருப்பதாகவும், அவர்கள் வாழும் 'தேவலோகம்' அல்லது 'சுவர்க்கம்' என ஒன்று இருப்பதாகவும் நம்பினார்கள். உண்மையாகவே முழுமையாக நம்பினார்களோ இல்லையோ, அவ்வாறு எழுதியிருக்கின்றனர். இயம்பியிருக்கின்றனர். அதன் அடிப்படையிலேயே மனிதன் இன்றுள்ள நிலையிலும் ஒரு மேல் நிலையை அடைய வேண்டும் என்ற ஆசை தான்: மனிதர்களும் தேவர்களாக, அல்லது அவர்கட்குச் சமமாக வேண்டும் என்பது தான். அவர்கள் வாழுமிடமும் தேவலோகமாக இருக்க வேண்டும் என்பது தான். இருக்கும் நிலையினும் ஓர் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்ற அவனது தணியாத தாகம் தான். ஆலின் விதை போல, அந்த வளர்ச்சித் திறன் மனிதனுக்குள் இருக்கிறது. அவன் இறந்து தேவனாகப் பிறக்க வேண்டுவதில்லை. இவ்வுலகை நீத்து தேவலோகத்திற்குப் போக வேண்டுவதில்லை. இந்த வாழ்க்கையில், இந்த உலகிலேயே தேவனாக வாழலாம் என்று நமது சான்றோர் பலர் நம்பினர். அதாவது :

- விஞ்ஞானிகள் கூறுவது போன்று பல லட்சம் ஆண்டுகள் பரிணாம வளர்ச்சிக்குக் காத்திருக்காது,
- வைதிகர்கள், மதவாதிகள் கூறுவது போன்று, இந்தப் பிறவியில் தவம் மேற்கொண்டு, உடலை வருத்தி, ஆசைகளை அகற்றி, துறவறம் பூண்டு, அடுத்த பிறவி வரை காத்திருக்காது,

இந்த உலகில், இல்லறத்தில் நின்று, இயற்கைக்கு மாறாக இன்றி, இயற்கையொடிணைந்து வாழ்ந்து, தேவர்கட்குச் சமமான வாழ்வைக் காணலாம். தேவலோகம் என்று கூறப்படும் உலகுக்கு இணையாக உலகை இந்த மண்ணிலேயே படைக்கலாம் என்று நம்பினார்கள். போதித்தார்கள். வள்ளுவர் இதை அழகாக, தெளிவாகக் கூறுகிறார் :

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்*

என்கிறார். எனவே இந்த உலகில், முறையாகக் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க விதிகளைக் கடைப்பிடித்து, மனித தர்மத்துக்கு மாறாத வழிமுறையில் நின்று, உலகில் எப்படி வாழ வேண்டுமோ அவ்வண்ணம் வாழ்ந்தால் அவர்கள் விண்ணுலகத்தில் இருப்பதாக நாம் நம்பும் தெய்வத்திற்குச் சமமாக மதிக்கப்படுவார்கள் என்கிறார். அவன் “வையத்தானே எனினும் வானிக்கண் உறையும் தேவருள் ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படும்” என்பார் பரிமேலழகர்.

இதே கருத்தை இந்த நூற்றாண்டில் பாரதி பிரதிபலிக்கிறார். அவரது ஆசையைத் தெளிவாகவே கூறுகிறார். அவருக்கு ஒருவர் இருவர் மட்டும் இந்த நிலையை அடைவதில் திருப்தி இல்லை. அவர் தனது நாட்டினர் அனைவரும், மற்ற நாட்டினரும் கூட ஒருமிக்க அந்த நிலையை அடைய வேண்டும் என்கிறார்.

*மாற்றி வையம் புதுமையுறச் செய்து*
*மனிதர் தம்மை அமரர்களாக்க*

விரும்புகிறார்.

*எல்லோரும் அமரர் நிலையினை எய்தும் நல்வழியை*
*இந்தியா உலகிற்களிக்கும்*

என்று கூறியவர், மீண்டும் அதை உறுதிசெய்து, “நம் இந்தியா உலகிற்களிக்கும்” என்கிறார். பாரதி பேராசைக்காரர், நாம் அமரர் நிலையை அடைந்தால் மட்டும் போதாது, அமரர்கள்

நம்மைத் தங்கட்கு இணையானவர்களாக மதித்து, நம்மொடு உறவாட வேண்டும் என்பது அவர் விருப்பம்.

*தூண்டுமின்ப வாடைவீசு துய்ய தேன்கடல்*
*சூழநின்ற தீவிலங்கு சோதி வானவர்*
*ஈண்டு நமது தோழராகி எம்மொடமுதம் உண்டு குலவ*

வேண்டுகிறார். வானவர் இங்கு வந்து நமது தோழராக வேண்டும். எம்மோடு அமுதம் உண்டு குலவ வேண்டும் என்கிறார். அவர் அத்துடன் திருப்தி அடையவில்லை.

*நண்ணி அமரர் வெற்றிகூற, நமது பெண்கள் அமரர் கொள்ள*
*வண்ணம் இனிய தேவமகளிர் மருவ யாமும் உவகை துள்ள*

வேண்டுமென்கிறார். நமது வெற்றியைப் பாராட்டி அமரர் பாட வேண்டும். நமது பெண்களை அவர்கள் திருமணம் செய்துகொள்ள வேண்டும். வண்ணத்தில் இனிய தேவ மகளிர் நமது வாழ்க்கைத் துணைகளாக வேண்டும். நாம் இங்கு இந்த உலகில் இந்த வாழ்விலேயே அமர நிலையை, அதற்கு ஒத்த உயர்வை எய்தவேண்டும் என்கிறார். இதன் அடிப்படைப் பொருள் என்ன என்று ஆய்வது பொருந்தும். இது ஏதோ கவிஞனின் பொருளற்ற கற்பனை அன்று.

*துறக்கம் என்பதேன்? சுவர்க்கம் என்பதேன்?*
*இறக்கும் நாள் வரை இன்னல் ஏன்? புவி*
*நமக்கின்றுள்ளது: நாமதை மாண்புற*
*அமைப்பதல்லவோ அறிவின் பாலது*

என்னும் கவிஞன்

*காவியமாகவும் கற்பனைப் பார்வையில்*
*ஓவியமாகவும் உரைத்த வீட்டினை*
*மண்ணில் நாட்டுவம்: வானவர் வாழ்வினைக்*
*கண்ணில் காணுவம்*

என்று உறுதி கூறுகிறான். இதற்கான பாதையை வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே கூறிச் சென்றார். பாதை நீண்ட ஒன்று அல்ல. கரடு முரடானது அன்று. கல்லும் கள்ளியும் படர்ந்ததன்று. இயற்கையானது. எளியது. அவர் கூறும் பாதை வையத்து வாழ்வாங்கு வாழ்வது தான். அதற்கு நமது சான்றோர்கள் வழியும் காட்டிச் சென்றிருக்கிறார்கள்.

# மானம் பார்க்கின் கெடும்

இன்றைய சமுதாயத்தில் பல துறைகளிலும் பணியாற்றும் தொண்டு நிறுவனங்கள் இருக்கின்றன. அது அரசியல் துறையாக இருக்கலாம்: சமயத் துறையாக இருக்கலாம். பொதுவான சமுதாயம் துறையாக இருக்கலாம், மக்களின் மேம்பாட்டிற்காக, நலிவுற்றவல் நலனுக்காக, தாழ்த்தப்பட்டவர் முன்னேற்றத்திற்காகப் பணிபுரியும் நிறுவனங்களாக இருக்கலாம். அரசியல் கட்சிகலாகவும் இருக்கலாம், இவற்றில் பணியாற்றும் தொண்டர்கள், இந்நிறுவனங்கட்குத் தலைமையேற்பவர்கட்குச் சில தகுதிகள் வேண்டும், கூறுபாடுகள் வேண்டும்.

சமுதாய நலனுக்காகத் தொண்டு செய்பவர்களைக் குடி செய்பவர்கள் என்கிறார் வள்ளுவர். அதாவது தாம் சார்ந்த குடியின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுபவர்கள், இங்கு குடி என்பதைக் குடும்பம் எனக் பொருள் கொள்வது பொருந்தாது, பொதுவாகக் குடிமக்கள்: அது அன்றைய சூழ்நிலையில் ஒருவர் பிறந்த ஊர்க்குடிமக்களாக இருக்கலாம்: தாம் சார்ந்த இனமாக இருக்கலாம், தனது இனத்தின், தான் பிறந்த நாட்டின், இடத்தின் முன்னேற்றத்திற்காக உழைப்பவர் குணநலனைப் பற்றி வள்ளுவர் விரிவாகப் பேசுகிறார். அதற்கென ஓர் அதிகாரமே வகுக்கிறார். அதில் ஒலு குறள் குறிப்பிடத்தக்கது,

*குடிசெய்வார்க் கில்லை பருவம்; மடிசெய்து*
*மானம் பார்க்கின் கெடும்*

என்கிறார். இதில் மூன்று கூறுபாடுகள் இடம்பெறுகின்றன. முதலில் சேவை செய்பவர்க்கு ஏற்ற காலம் என ஒன்றில்லை. எல்லாக் காலமும் ஏற்றதே. இரவும், பகலும் ஒன்றே. மழையும், வெயிலும் ஒன்றே. ஒரு குடியின் துன்பந்துடைக்கும் தொண்டை மேற்கொண்டவர் பல துன்பங்களைத் தாம் தயங்காது ஏற்க வேண்டும். அடுத்து, மடி செய்தல் கூடாது என்கிறார். சோம்பல் கூடாது என்கிறார். பொதுவாக வள்ளுவர் மனித முன்னேற்றத்திற்கு, தனி மனிதர் உயர்விற்கு முதல் எதிரியாக கருதுவது சோம்பல். அவர் மூன்றாவதாகக் கூறுவதுதான், ஆழ்ந்து எண்ணவேண்டிய ஒன்று. ‘மானம் பார்க்கின் கெடும்‘ என்கிறார். வள்ளுவர் மானத்தினைப் பெரிதாக மதித்தவர். அதற்கென ஒரு அதிகாரமே வகுத்தவர். மயிர்நீங்கிய காலை, கவரிமான் உயிர் வாழாது. அதைப் போலவே, மானத்திற்குக் கேடுவரின் உயிர் நீப்பர் என்கிறார். தமிழ் மன்னர் தங்கள் மானத்திற்கு இழுக்கு வந்த காலை வடக்கிழுந்து உயிர் துறந்ததாக இலக்கியம் கூறுகிறது. தமிழ்ப் பண்பாடு மானத்திற்கு அத்தகையதொரு மரியாதையைக் கொடுத்து வந்தது. அந்தப் பின்னணியில் வந்த வள்ளுவர் குடி செய்வார்

மானம் கருதக்கூடாது என்று கூறியதோடு நில்லாது மானம் பார்க்கின் கெடும் என்கிறார். பொதுத் தொண்டில் இறங்கியபின் பணிவுடன் செயல்பட வேண்டும். பெருமிதம் இடம்பெறக் கூடாது. நிதிமிகுந்தவர் பொற்குவை தரலாம்; அவர்களையும் அணுகவேண்டும். அது மற்றவர் வாய்ச் சொல் மட்டுமே அருளலாம். அவர்களையும் அனைத்துச் செல்ல வேண்டும். குடி செய்பவர் கோபுரத்தையும் நாட வேண்டும், குடிசையையும் நாட வேண்டும். நாம் அவரிடம் போவதா என்ற பெருமிதமோ, அவரையெல்லாம் உதவிக்கு அணுகுவதா என்ற மான உணர்வும் தலையெடுக்கக் கூடாது.

*குடி செய்வார்க்கு இல்லை பருவம்: மடிசெய்து*
*மானம் பார்க்கின் கெடும்.*

# வள்ளுவர் வாழ்வியல்
# இசையிலா யாக்கை பொறுத்த நிலம்

டாக்டர் வா.செ. குழந்தைசாமி

தமழர்களைப் பற்றிய, தமிழ் நாட்டைப் பற்றிப் பொதுவாக அறிஞர்கள் எழுதும் பொழுதும் பேசும் பொழுதும் பண்டைத் தமிழர் பண்பாடு பற்றி, நாகரிகம் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். பண்டைத் தமிழர் பண்பு எனும் பொழுது அதன் கூறுபாடுகள் என்ன, குறிப்பிடத்தக்க, கோடிட்டுக் காட்ட வேண்டிய அம்சங்கள் என்ன என்ற கேள்வி எழுகிறது. இவற்றைப் பற்றி ஓர் அயல் நாட்டவர் அறிய விரும்பினால், அவருக்குப் பரிந்துரைக்கத்தக்க வகையில் தெளிவான ஒரு நூல் ஆங்கிலத்தில் இல்லை; மாணவர்கட்குப் பரிந்துரைக்கத்தக்க வகையில் ஒரு தகுதியான நூல் தமிழில் கூடக் காண்பது அரிதாக இருக்கிறது. தமிழர் வாழ்வு, தமிழர் நாகரிகம் போன்ற தலைப்புகளில் அமைந்த நூல்கள் தமிழர்களது பழக்க வழக்கங்கள், மரபுகள், சமயம், சடங்குகள் போன்றவற்றைக் கூறுவனவாகவே அமைந்துள்ளன.

தமிழர் தங்கள் வாழ்வில் மிக உயர்ந்த விழுமியங்களாகக் கருதியவை, வாழ்வின் குறிக்கோளாக அமைய வேண்டுமென எண்ணியவை எனும் பண்புகளில் முதலிடம் பெறுவது ‘புகழ்‘.

*தோன்றிட் புகழொடு தோன்றுக; அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று*

என்பது பலரும் அறிந்த குறள். வைய வாழ்வில் தங்கள் திறன் மூலம், செயல் மூலம் சமுதாயத்தின் ஏற்பை, பாராட்டுதலைப் பெறாதவர்கள், புகழ் பெறத் தவறுபவர்கள் பிறக்காமலேயே இருந்திருக்கலாம் என வள்ளுவர் அறுதியிட்டுக் இது என’குத் தோன்றும் பொருள். குறளுக்குப் பலரும், பலவகையில் பொருள்காண முயல்கிறார்கள். பரிமேலழகர் ‘மக்களாய்ப் பிறக்கின் புகழுக் கேதுவாகிய குணத்தொடு பிறக்க அக்குணமில்லாதார் மக்களாய்ப் பிறந்தலின் விலங்காய்ப் பிறத்தல் நன்று‘ எனப் பொருள் காண்கிறார். பிறப்பு நம் கையில் இல்லை. அதுவும் பிறக்கும் பொழுதே குறிப்பிட்ட குண நலன்களோடு பிறப்பதென்பது நாம் முடிவு செய்யக் கூடியது அன்று. பிறக்காமலிருப்பதும் நாம் முடிவு செய்யக் கூடியது அன்று. இந்த அடிப்படையில் ஒரு அவையில் தோன்றினால், ஒரு நிகழ்ச்சியில் பங்கு பெற்றால் புகழுக்கு உரியவர்களாக, புகழ் பெறத்தக்கவர்களாகத் தோன்ற வேண்டும். இல்லாவிட்டால் அந்த அவையில் தோன்றக் கூடாது; அந்த நிகழ்ச்சியில் பங்கு

பெறக் கூடாது எனவும் பொருள் காண்கின்றனர். இது ஏறத்தாழ ஓர் அறிவுரை. சாதாரணமாக யாரும் கூறக்கூடிய அறிவுரை. இதில் அவ்வளவாக வள்ளுவர் முத்திரை இருப்பதாகப்படவில்லை. ‘‘நீ பிறந்தது மண்ணுக்குப் பாரம். நீ பிறக்காமலே இருந்திருக்கலாம்’’ என்று நாம் கூடப் பொதுவாகக் கூறுகிறோம்.

தமிழர்கள் புகழை விரும்பியவர்கள். அதை ஒரு மகத்தான விழுமியமாக மதித்தவர்கள். ஒவ்வொரு மனிதனும் புகழ்தேட வேண்டும் என்று எண்ணியவர்கள்.

*புகழெனின் உயிரும் கொடுக்குவர்*
*பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்*

என்பது பாண்டிய மன்னன் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதியின் வாழ்வியல் இலக்கணம். நிலையில்லாத இந்த உலகத்தில் நிலைத்து நிற்க விரும்பியவர்கள். அதாவது ‘மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்‘ அதற்கெனக் கண்டவழி ஒன்றே உண்டு அவர்கள்,

*தம்புகழ் நிறுவித் தாம் மறைந்தனர்*

புகழ் ஒன்றே அமரத்துவம் உடையது. நிலையா உலகில் நிலைத்து நிற்க வல்லது. அது வேண்டத்தக்கது. விழையத்தக்கது.

இலங்கை வேந்தனான இராவணனும் தமிழ் மரபிற்கேற்ப, வாழ்வில் புகழ் ஒன்றே விரும்பத்தக்கது, வேண்டத்தக்கது, அழியாது நிலைத்து நிற்பது எனக் கருகிறான். ‘ஆசைதான் அச் சீதைபால் விடுதி‘ என்று வேண்டிய தன் மகன் இந்திரசித்துவிடம், இராவணன் :

*பேதைமை உரைத்தாய் பிள்ளாய்*
*உலகெலாம் பெயரப் பேராக்*
*காதைஎன் புகழினோடு*
*நிலைபெற அமரர் காண*
*மீதுஎழும் மொக்குள் அன்ன*
*யாக்கையை விடுவது அல்லால்*
*சீதையை விடுவது உண்டோ*

எனக் கூறுகிறான். தன் உயிரினும் மேலாக அவன் மதித்தது, ‘உலகெலாம் பெயரினும் பெயராது அவன் புகழ் பேசும் காதை‘. இராவணன் மேலும் பேசுகிறான் :

*வென்றிலென் என்ற போதும்*
*வேதம் உள்ளளவும் நானும்*
*நின்றுளென் அன்றோ மற்றுஅவ்*

*இராமன் பேர் நிற்கும் ஆயின்*
*பொன்னுதல் ஒரு காலத்தும்*

*தவிருமோ? பொதுமைத்து அன்றோ?*
***புகழுக்கும் இறுதி உண்டோ?***

என்பது இராவணன் கூற்று. உலகில் இறுதி இல்லாத நிலைபேறு உடையது புகழ். **பண்டைத் தமிழர் வீடுபேற்றினும் வையக வாழ்வில் புகழையே மேலாக மதித்தனர்.** வள்ளுவரும் ''வையத்து வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'' என்றார். மேலும் :

*ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது*
*ஊதியம் இல்லை உயிர்க்கு*

என்பதும் பொய்யாமொழிப் புலவர் தீர்ப்பு. 'ஈட்டிய ஒன்றைத் தேவைப்பட்டார்க்கு ஈதல் ஒரு தலை சிறந்த செயல்' அதன் பயன் 'புகழ்'. தனி மனிதர் புகழ் பெறுவதை, புகழ் பொங்கும் வாழ்வை விரும்ப வேண்டும்; வலியுறுத்த வேண்டும். 'புகழ்' போற்றப்பட வேண்டிய ஒரு கூறுபாடு, ஒவ்வொருவரும் தேடவேண்டிய, அடைய முயற்சி செய்ய வேண்டிய ஒரு மனிதப் பண்பு என்பது தான் நாம் கூறிய கவிதைகள் நமக்குக் காட்டும் உண்மை.

ஒவ்வொரு துறையிலும் சிகரம் போல் உயர்ந்து நிற்கும் தனி மனிதர்களின் பங்களிப்பின் மூலம் தான் உலகம் முன்னேறுகிறது. புதிய வித்துகளை உருவாக்குபவர் ஒருவர். அல்லது ஒரு சிலர். அதை விதைத்து, எருவிட்டு, நீர் பாய்ச்சி விளைவு காண்பவர் பலர். இதையே தான்,

*அரிய பொருள் எதையும் தேடியளிக்கச் சிலர் போதும்,*
*மற்றதனைக் கூடிச் சுவைக்கக் குவலயத்தை நாமழைப்போம்*

என்கிறான் கவிஞன். 'தத்துவம் சொல்வேன், தனிச் சிலர் சாதனை தவழும் மானிடம் தாவிட விசைதரும்' என்பது கவிஞன் வாக்கு.

இந்தப் பின்னணியில் தான் ஒரு சமுதாயத்திற்குப் புகழ் மிக்கவர்கள் எவ்வளவு முக்கியம் என்பதை வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

*வசையிலா வண்பயன் குன்றும்; இசையிலா*
*யாக்கை பொறுத்த நிலம்*

என்பது வள்ளுவம். புகழில்லாத உடம்பின் பாரத்தைச் சுமக்கும் நிலத்தில் குற்றமில்லாத விளைச்சல் குறையும் என்கிறார். சுருக்கமாகச் சொல்வதானால் புகழில்லாத உடம்பைச் சுமக்கும் ஒரு நாடு விளைவில்லாத களர் நிலம் போன்றது என்கிறார். இதன் மூலம் வள்ளுவர் கூறும் செய்தி என்ன? உணர்த்தும் உண்மை என்ன என்ற கேள்வி எழுகிறது.

**'தோன்றில் புகழொடு தோன்றுக' என்பது வள்ளுவர் ஒரு சமுதாயத்தில் தனி மனிதர்க்குச் சொன்ன அறிவுரை. இசையிலா யாக்கை பொறுத்த நிலத்தில் வசையிலா வண்பயன் குன்றும் என்பது அவர் ஒரு சமுதாயம் முழுவதற்குமாகச் சொன்ன செய்தி.** ஒரு மகத்தான அறிவுரையைத் தன்னுள் கொண்டது. ஏனோ புலவர் உலகம் அவ்வளவாக இதன் முக்கியத்துவத்தைச் சமுதாயத்தின் முன் வைக்கவில்லை.

'ஒரு நாட்டில் புகழ் பெறாதவர்கள், பலர் தோன்றுகிறார்கள். அந்த நாடு என்ன செய்ய முடியும். அவர்களை ஒதுக்கிக் கடலில் தள்ளிவிட முடியாது. அவர்களைப் பொறுமையாகத் தாங்கித் தானேயாக வேண்டும். இதில் ஒரு நாடு செய்வதற்கு என்ன இருக்கிறது' என்ற கேள்வி எழலாம். எழுவது இயல்பு.

ஒரு நாட்டில் புகழ் உள்ளவர்கள் தாமாக உருவாகிவிடுவதில்லை. வானத்தில் இருந்து மழை வருவதுபோல் நமது முயற்சி எதுவுமின்றி வந்து விடுவதில்லை. ஒரு சமுதாயம் புகழ் பெறும் வித்து (Potential) உள்ளவர்களை அடையாளம் கண்டு, ஆதரித்து ஊக்குவித்து, புகழ் மிக்கவர்களை உருவாக்க வேண்டும். புகழ்மிக்கவர்கள் உருவாவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். ஆண்டுதோறும் நோபல் பரிசு பெறுபவர்கள் பெயர்கள் அறிவிக்கப்படுகின்றன. அந்தப் பட்டியலை ஒரு சில ஆண்டுகட்கு ஆய்வோமானால், அதில் அமெரிக்க நாட்டினர் பெரும்பான்மையாக இருப்பதைக் காணலாம். அப்படியானால் நோபல் பரிசு பெறும் மேதைமை உள்ளவர்கள் அமெரிக்காவில்தான் பெரும்பான்மையினராகத் தோன்றுகிறார்களா என்ற கேள்வி எழலாம். அவ்வாறு கருத இடம் இல்லை. மற்ற நாடுகளில் இருந்து அங்கு குடியேறியவர்களும் அவ்விருதைப் பெற்றிருக்கிறார்கள். இந்தியாவிலிருந்து அமெரிக்காவில் குடியேறிய மூன்று இந்தியர்கள் நோபல் பரிசு பெற்றிருக்கின்றனர். அப்படிப்பட்ட பரிசு பெறுவதற்கானவர்களை உருவாக்கும் சூழ்நிலை அங்கிருக்கிறது. அந்தத் தகுதி உள்ளவர்கள் அடையாளம் காணப்படுகிறார்கள். அங்கீகாரம் பெறுகிறார்கள். ஊக்குவிக்கப்படுகிறார்கள். உலகுக்குத் தெரியும்படி உயர்த்திப் பிடிக்கப்படுகிறார்கள். பிரகாசப்படுத்தப்படுகிறார்கள்.

அன்றைய கிரீசிலிருந்த (Greece) ஏதென்ஸ் ஒரு சிறிய நகரம். அங்கு தோன்றிய சாக்ரெடீஸ் 2400 ஆண்டுகட்குப் பின்னர் இன்றும், கிரேக்கர்களால் மட்டுமல்ல, ஐரோப்பியர்களால் மட்டுமல்ல, உலக அளவில் அறிவின் சின்னமாக மதிக்கப்படுகிறார். அவருடைய மாணவர் பிளேட்டோ, இன்று உலகு முழுவதும் அவரைக் குடியரசுத் தத்துவத்தின் தந்தை எனக் கருதுகிறது. அவருடைய மாணவர் அரிஸ்டாட்டில், பதினேழாவது நூற்றாண்டு வரை, துறை எதுவாயினும், அரிஸ்டாட்டில்தான் அதன் தலைமகன் என்ற நிலை இருந்து வந்தது. ஒரு சிறிய நகரத்தில் ஒரு நூற்றாண்டுக்குள் இவ்வளவு சிறப்புள்ள மாமனிதர்கள் எப்படித் தோன்றினார்கள்? அன்றைய கிரேக்க சமுதாயம் சிந்தனையாளர்களை, தத்துவவாதிகளை, அறிஞர்களை மதித்தது. சாக்ரடீசுக்கு நஞ்சு கொடுத்ததையும் மனத்திற் கொண்டே இதைக் கூறுகிறேன். ஒரு சமுதாயம் எந்தத் திறமையை மதிக்கிறதோ, அந்தத் திறமை தோன்றும், எதை ஊக்குவிக்கிறதோ அது வளரும். எனவே புகழ் மிக்கவர்கள் வேண்டுமெனில் ஒரு சமுதாயம் அவர்கள் உருவாவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.

*எதனை விரும்புகிறோமோ அது தோன்றுகிறது*
*எதை ஆதரிக்கிறோமோ அது வளர்ச்சி பெறுகிறது*
*பேணாத பண்டம் அழிந்து போகும்*
*பழக்கத்திலே இல்லாத திறமை இழந்து விடப்படும்*
*அறிவுடையோரையும், லோகோபாரிகளையும், வீரரையும்*
*கொண்டாடாத தேசத்தில் அறிவும் லோகோபகாரமும் வீரமும்*
*மங்கிப் போகும்*

என்பது பாரதி வாக்கு. எனவே,

*வசைஇலா வண்பயன் குன்றும்; இசைஇலா*
*யாக்கை பொறுத்த நிலம்*

என்பது வள்ளுவர் சமுதாயத்திற்காக எழுதிய குறள். ஒரு சமுதாயம் 'இசை' பட வாழும் மக்களை ஒவ்வொரு துறையிலும் உருவாக்க வேண்டும். அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்பது வள்ளுவர் தனி மனிதர்க்குச் சொன்ன தத்துவம். 'இசையிலா யாக்கை பொறுத்த நிலத்தில் வசையிலா வண்பயன் குன்றும்' என்பது வள்ளுவர் ஒரு சமுதாயத்திற்குச் சொன்ன செய்தி. இது அன்றும் பொருத்தமாக இருந்தது. இன்றும் பொருந்தும். நமது சமுதாயம் மட்டுமன்றி உலகம் முழுமைக்கும் பொருந்தும்.

# சான்றோர் வாக்கு - 2

*வசை இலாவண்பயன் குன்றும் இசைஇலா*
*யாக்கை பொறுத்த நிலம்*

என்பார் வள்ளுவர். புகழ் இல்லாத உடலைச் சுமக்கும் நாட்டில் பழித்தற்கில்லா நிலையுடைய வளங்கள் குறையும் என்கிறார். மிகச் சுருக்கமாகச் சொல்வதாயின் புகழ் நிறைந்த பெருமக்கள் இல்லாத நாட்டில் வளங்கள் பெருகா; அவை குறையும் என்கிறார்.

*தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலில் தோன்றாமை நன்று*

என்ற குறள் தனி மனிதனுக்குச் சொன்னது. ஒவ்வொருவரும் புகழ்பெற வாழ முயல வேண்டும் என அறிவுறுத்துவது. இந்தக் குறள் சமுதாயத்திற்கும் சொன்னது. ஒரு சமுதாயம் வளம் பெற வாழ்வதாயின் அங்கு புகழ் மிக்கவர்கள் தோன்ற வேண்டும். அவர்களை எப்படிப் பெறுவது. எங்கிருந்து பெறுவது? அப்படிப்பட்டவர்களைப் பெரிய அளவில் இறக்குமதி செய்ய இயலாது; கடன் வாங்க இயலாது. ஒரு சமுதாயம் தானே உருவாக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களை உருவாக்குவதற்கான வழிவகைகள் என்ன என்ற கேள்வி எழுகிறது.

ஆண்டுதோறும் நோபல் பரிசுகளைப் பெறும் மேதைகளின் பெயர்கள் இயற்பியல், வேதியல், மருத்துவம், பொருளாதாரம், இலக்கியம் போன்ற துறைகளில் அறிவிக்கப்படுகின்றன. அவர்கள் பட்டியலை ஆராய்வோமானல் அதில் மிகக் கணிசமான பகுதியினர் அமெரிக்கர்கள் என்பது எளிதாகப் புலப்படும். அப்படியானால் நோபல் பரிசு பெறும் மேதையுள்ளோர், அமெரிக்காவில்தான் பிறக்கிறார்களா என்ற கேள்வி எழுகிறது. அப்படி இல்லை என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வர். தொழில் திறமை ஒருவருக்கு இருப்பது வேறு. அந்தத் திறமை முளைவிட்டு, செடியாகி, மரமாகி, அரும்புவிட்டு, காய்த்துக் கனி தருவது வேறு. அதற்கான நிலம் வேண்டும், நீர் வேண்டும், எரு வேண்டும், பாதுகாப்பு வேண்டும். சுருக்கமாகச் சொல்வதனால், எந்தத் திறனும் மலர்வதற்கேற்ற சூழ்நிலை வேண்டும். இது எல்லாத் திறனுக்கும் பொருந்தும்.

உடன் பிறந்த திறன் உருப்பெற்றும் சூழ்நிலைக்கு வேண்டுவன பல ஆயினும், முக்கியமானது திறமையை அடையாளம் கண்டு கொள்ளும் திறன். அவ்வாறு அடையாளம் கண்டபின், அதை வெளிப்படையாக ஏற்கும் பெருந்தன்மை, ஊக்கமளிக்கும் ஆக்கபூர்வமான

மனப்பான்மை, அன்னாரை முறையாக மதிக்கும் பக்குவம் பெற்ற மனநிலை, அவர்கள் தம் திறமைக்கேற்பப் பணிபுரிய வாய்ப்பளிக்கும் தலைமை. ஒரு சமுதாயம் எந்தத் திறனை மதிக்கிறதோ, அந்தத் திறன் வளரும். எந்தத் திறனை ஊக்குவிக்கிறதோ, அந்தத் திறன் விரிவடையும். மகா கவிகளை மதிக்காத நாட்டில் மகா கவிகள் பிறக்க மாட்டார்கள் என்பது பாரதி வாக்கு.

ஒரு குறளில் 'தோன்றின் புகழோடு தோன்றுக' எனத் தனி மனிதனுக்குக் கூறிய வள்ளுவர், மற்றொரு குறளில் 'புகழ் இல்லாத மக்கள்தம் உடலை தாங்கும் நாட்டில் வளம் குன்றும்' என்கிறார். 'புகழ்' என்பது ஏதோ மேதைகட்கு மட்டும்தான் என்பதில்லை. பாரதி கூறுவதுபோல, செய்யும் தொழில் எதுவாயினும் அது தெய்வம்; அதில் திறமைதான் நமது செல்வம். சந்திர மண்டலத்தில் கண்டு தெளிவும் அறிவியல் அறிஞனும், சந்தி தெருப்பெருக்கும் சாதாரணத் தொழிலாளியும் தமது கடமையைச் சிறப்பாகச் செய்வார்களாயின் அவர்கள் 'புகழுக்கு' உரியவர்கள்தாம்.

*இமயந்தான் முடியுடைய தென்பதில்லை*
*எழுந்துள்ள குன்றுக்கும் சிகரம் உண்டு*

'மனித வள மேம்பாடு' (Human Resources Development) பற்றி இன்று பேசுகிறோம். மக்கள் திறனை வளர்க்க வேண்டுமென்பது இன்று ஓர் இயக்கமாக உருவெடுத்திருக்கிறது. ஒரு சமுதாயத்தின் வளம் புகழ்மிக்க மக்களைப் பொறுத்தது எனக் கூறுவதன் மூலம் மக்கள் திறனின் முக்கியத்துவத்தை வற்புறுத்துவதன் மூலம் வள்ளுவர் அதை வளர்க்க வேண்டிய தேவையை வெளிப்படையாகக் கூறி விடுகிறார். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த வள்ளுவர், நாம் இன்று பேசும் தத்துவமாகிய மனித வள மேம்பாடு பற்றி அறிந்திருப்பாரோ என்ற கேள்வி எழலாம். நாம் இன்று மனித வள மேம்பாடு பற்றிப் பேசும் ஆழத்தோடும், பரப்போடும் அவர் எண்ணியிருக்கவோ, எழுதியிருக்கவோ முடியாது. எனினும் ஒரு நாட்டின் வளத்திற்குப் புகழ்மிக்க மனிதர்கள் தேவை என்ற கருத்தை அவர் அன்று கூறியிருப்பது பாராட்டத்தக்கது. பயிற்சியின் பயனாய் செய்யும் உடல் உழைப்பின் அடிப்படையில் அமைந்திருந்த பொருளாதாரச் சூழலில் வாழ்ந்து மறைந்த வள்ளுவர், வளம் பெருக புகழ் உடையார் தேவை என்கிறார்.

*போற்றுவதும், தகுந்தவரைப் புகழ்வதும் நம்*
*பொறுப்பென்னும் நெறியுடையோம்*

என்கிறான் கவிஞன். புகழுடையார் உருவாக, வளர, தகுந்தரைப் போற்றும், புகழும் பண்பு வளரவேண்டும். ‘‘என்னினும் மிஞ்சினோர் வளர்க’’ என வாழ்த்துகிறான் கவிஞன். அந்த மனப்பான்மை வளரவேண்டும்.

இயற்கை வளம், நிலப்பரப்பு போன்றவையே ஒரு நாட்டின் வளத்திற்கு அடிப்படை என்று எண்ணப்பட்ட காலத்தில், மனித வளம் பற்றி வள்ளுவர் கூறியிருப்பது எண்ணி, எண்ணி வியக்கத்தக்கது. புகழ்பட வாழ்வாரை உருவாக்குவது ஒரு சமுதாயத்தின் கடமை. நமது சமுதாயம் அதை அவ்வளவாக உணரவில்லை. நாம் வளர்ந்தாரைத் துதிக்கிறோம், வளர்வாரைத் தடுக்கிறோம்.

இந்த நிலை மாற வேண்டும். இது வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு.

# சான்றோர் வாக்கு - 3

*அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்*
*என்னுடைய ரேனும் இலர்*

என்பார் வள்ளுவர். அவருடைய இந்தக் கருத்து ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. அவர் கூறிய காலத்தைவிட இன்று அக்குறள் முக்கியத்துவம் பெறுகிறது. வள்ளுவரே கூட, அவர் எழுதிய காலத்தில் எண்ணிப் பார்க்காத முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

மனித வரலாற்றில் மூன்று சக்திகள் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தன. ஒன்று உடல் வலி; இரண்டாவது பண பலம் அல்லது பண வலி; மூன்றாவது மதி வலி; அதாவது Muscle Power, Money Power, Power of the Mind. வள்ளுவர் காலம் வேளாண்மை யுகத்தை சார்ந்தது. அது முக்கிய கட்டத்தின் ஆரம்ப காலம் என்று கூடக் கூறலாம். வேளாண்மை யுகத்தில், அதுவும் வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் உணவு, உடை, உறைவிடம் மூன்றுக்கும் உடலுழைப்பையே நம்பியிருந்தனர். பெரும்பாலும் தொழில் யுகம் மலர்ந்த காலத்தில்தான் முதலாளிகள் தோன்றினர். பணவலி முக்கியத்துவம் பெற்றது. தொழில் நாகரிகமும் பொருளாதாரமும் தொழில் நுட்பத்தின் அடிப்படையில் அமைந்ததாகலின் கல்வியறிவு, அதன் அடிப்படையில் அமைந்த பயிற்சி முக்கியத்துவம் பெற்றது. எனவே, தொழில் நாகரிகத்தின் மதிவலியும் கருதப்படத்தக்கதான கண்ணியத்தைப் பெற்றது. இந்த நூற்றாண்டில் இரண்டாம் பாதியில் கல்வியறிவே ஒரு வளமாக விரிந்து, மலர்ந்து நிற்கிறது. கல்வி வளம் புதுப்பிக்கப்படக் கூடியது. விரிவுபடுத்தப்படக் கூடியது. அது இயற்கையில் இல்லாத வளங்களையும் தேவைக்கேற்ப படைக்கும் திறன் உடையது. சான்றாக ஒரு விண்கலத்தை, அதாவது செயற்கைக் கோளை எடுத்துக் கொள்வோம். அதைச் செய்யும் பொருள் இயன்ற அளவில் கனம் குறைந்ததாக இருக்க வேண்டும். உயர்ந்த வெப்ப நிலையில் உருகாததாக இருக்க வேண்டும். உயர்ந்த வெப்பத்தினிடையில், மிகுந்த வேகத்தில், செல்லும் சூழ்நிலையிலும் வலிமை குறையாததாக இருக்க வேண்டும். அப்படி ஒரு உலோகம் இயற்கையில் இல்லை. இன்று அது செயற்கையாக ஆய்வுச் சாலைகளில் உருவாக்கப்படுகிறது. அதற்குத் துணைபுரிவது கல்வி அறிவு.

இன்றைய உலகில் நாம் ஒரு விசித்திரமான சூழ்நிலையைச் சந்திக்கிளோம். இந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் முன்னிறேய நாடுகள், பின்தங்கிய நாடுகள் என இரு பிரிவுகளாக நிற்கிறது. முன்னேறிய நாட்டிலிருக்கும் சுமார் 23 சதவிகித மக்கள் உலகின் 80

சதவிகித வளங்களை அனுபவிக்கிறார்கள். மற்ற 77 சதவிகித மக்கட்கிருப்பது 20 சதவிகித வளம் மட்டுமே. இதற்கு என்ன காரணம் எனும் கேள்வி எழுகிறது. அதற்கு நிலப்பரப்போ, மக்கட் தொகையோ, இயற்கை வளமோ, பொருளாதார, அரசியல் அமைப்போ முக்கியமான காரணமன்று. நிலப்பரப்பு காரணமாயின் ஒரு ஹாங்காங் (Hong Kong) அல்லது தைவான் (Taiwan) இவ்வளவு வளம் பெற்றதாக இருக்க முடியாது. மக்கட்தொகையெனில், 30 லட்சத்திற்கும் குறைவான தொகையைக் கொண்ட சிங்கப்பூர் இந்தியாவுக்கு உதவும் செல்வ வளர்ச்சியைப் பெற்றிருக்க முடியாது. இயற்கை வளமாயின், பெரும்பகுதி பாலைவனமாக இருக்கும். இஸ்ரேல் இவ்வளவு முன்னேறியிருக்க இயலாது. ஒரு குறிப்பிட்ட மொழி பேசும் நாடுகளில் செல்வ நாடுகளும் இருக்கின்றன. ஏழை நாடுகளும் இருக்கின்றன. எனவே, இவை இன்று முக்கியமான கூறுபாடுகளாக எண்ணப்படுவதில்லை. முன்னேறிய நாடுகளில் செல்வ நிலைக்குக் காரணமானவை மூன்று.

1. அறிவியல், தொழில்நுட்பத் துறையில் அவை அடைந்து இருக்கும் உச்ச அறிவு நிலை.
2. புதியன படைக்கும் ஆற்றல்.
3. அவ்வப்பொழுது புதியன உருப்பெறும்பொழுது அவற்றைப் பொருளாதார, சமுதாய வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளும் திறன்.

நாம் கூறிய மூன்றும் ஒரு சமுதாயத்தின் கல்வி அறிவுத் திறனையே அடிப்படையாகக் கொண்டவை. 1955-இல் அமெரிக்க நாட்டு மக்களின் சராசரி ஆண்டு வருமானம் 7500 யு.எஸ். டாலராக இருந்தது. அது 1970-இல் 11500 யு.எஸ். டாலராக உயர்ந்தது. இந்தக் காலப்பகுதியில் அமெரிக்க நாட்டில் புதிய இயற்கை வளங்கள் எவையும் கண்டுபிடிக்கப் படவில்லை. இந்த வளர்ச்சி முழுவதும் ஆய்வின் அடிப்படையில், இருக்கின்ற வளத்தை மிகுந்த திறனுடன் பயன்படுத்தும் வழியில், பெற்றதேயாகும். இப்படிப்பட்ட சூழ்நிலை ஒரு இருநூறு ஆண்டுகட்கு முன்பு கூட இருக்கவில்லை. இது நாம் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் காணும் சூழ்நிலை. ஆனால், வள்ளுவர் 1800 ஆண்டுகட்கு முன்பே

*அறிவுடையார் எல்லாம் உடையார்*

என்று அறுதியிட்டுக் கூறிவிடுகிறார். தொழில் நுட்பத்துறை, அறிவியல் துறை இவற்றில் உயர்நிலை. புதியன படைக்கும் ஆற்றல் ஆகிய இரண்டும் ஒரு நாட்டிற்குத் தேவையேனும், புதிய தொழில் நுட்பத்தை நாம் கடன் பெறலாம். விலை கொடுத்தும் வாங்கலாம். ஆனால், அவற்றை நமது பொருளாதார, சமுதாய வளர்ச்சிக்கும் பயன்படுத்தும் திறன் பரவலாக மக்களுக்கிருக்க வேண்டும். அறிவியல், தொழில்நுட்பத் துறைகளில் படைக்கப்படும்

கருவிகளை, செயல்முறைகளை, ஒரு தற்குறிச் சமுதாயம் அடைய முடியாது. அதற்குக் கல்வியறிவு தேவை.

உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்று தேவைகட்கும் உடலுழைப்பை, நிலவளத்தை, நீர் வளத்தை நம்பியிருந்த காலத்தில், கல்வி ஒரு ஆபரணமாக, பண்பாட்டுத் தேவையாகவன்றி, பொருளாதாரத் தேவையாக இல்லாத இருந்த காலத்தில், அறிவுடையார் உல்லாம் உடையார் என்று நமக்கு அறிவித்த சான்றோர் வாக்கு 1800 ஆண்டுகட்குப் பின் இன்று நமக்குச் சிறந்த தாரக மந்திரமாக உலகு ஒப்பிய உண்மையாக அமைந்திருக்கிறது. நிலவளம், நீர்வளம், கனி வளம் ஆகியன அவ்வளவாக இல்லாத தமிழகத்திற்கு ‘அறிவுடையார் எல்லாம் உடையார்‘ என்பது உறுதுணையாக, ஊன்றுகோலாக, நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிறது.

# நிறை காக்கும் காப்பு

வள்ளுவம் வாழ்வியல் கூறும் நூல். வாழ்க்கைத் துணை நலம் பற்றிப் பேசவந்த வள்ளுவர், பெண்களின் திண்மைகளில் திண்மையான கற்புப் பற்றிப் பேசுகிறார். நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் ஓர் உண்மையை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். தொன்று தொட்டு கற்பு என்பது பெண்ணொழுக்கமாகவே கருதப்பட்டு வந்திருக்கிறது. எந்த ஆங்கிலச் சொல்லும் ஆரம்ப காலத்தில் பெண்ணுக்கு உரிய சொல்லாகவே கருதப்பட்டது. கற்பு என்பது பெண்கள் தாமாகவே ஏற்றுக் கொண்ட ஒரு ஒழுக்கம் என்பது மட்டுமன்றி, சமுதாயம் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கும், அவர்கட்கு விதித்திருக்கும் ஓர் ஒழுக்கமாகவும் கருதப்பட்டது. எனவே அதை உறுதிப்படுத்தச் சில கட்டுப்பாடுகளை உருவாக்கினர். அவற்றுள் வெளிப்படையாக எழுதப் பட்டனவும் உண்டு. பழக்கத்தின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்டனவும் உண்டு.

'சிறை' என்பது மதிலும் வாயில் காவலும் என்பார் பரிமேலழகர். கற்பகை காக்கத் தமிழ்ச் சமுதாயம் பெண்களைச் சிறைவைக்கவில்லை. இங்கு சிறை என்பதற்குத் தடைகள், கட்டுப்பாடுகள் எனப் பொருள் கொள்வதே பொருந்தும். இவ்வாறு பொருள் கொள்ளத் தமிழ் வழக்கு இடம் தருகிறது. அகராதி ஏற்கிறது, கட்டுப்பாடுகள் இன்னும் பெரும்பாலான சமுதாயங்களில் இருக்கின்றன. ஆண்கட்கு இருக்கும் உரிமை பெண்கட்கு இல்லை. இந்த நிலையில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே வள்ளுவர் கட்டுப்பாடுகள் தேவையில்லை என்கிறார். பெண்கள் தமது கற்பைக் காக்க ஆண்கள் நெறிப்படுத்தத் தேவையில்லை. அவர்கட்கிருக்கும் வேலி அவர்களது மாண்பு. மனத்திண்மையே அவர்கள் கற்புக்குக் காப்பு. அதுவே தலையாயது, மற்ற எந்தக் காவலும் பயனில்லை. கற்பு என்பது ஆண் பெண் உறவு பற்றிய ஒரு அம்சமாகக் கொள்ளாது பொதுவாகச் சமுதாயம் ஏற்றுக் கொண்ட ஒரு ஒழுக்கம் என்ற பொருளில் பயன்படுத்துவதும் பொருந்தும். நம்மில் பெரும்பாலோர் சில ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்கிறோம் என்றால் அது இந்த உலகில் தண்டனைக்கு அன்றியோ, அல்லது வரும் உலகில் ஊழ்வினைக்கு அஞ்சியோ அன்று. நமக்கு நம் மீது இருக்கும் மரியாதை காரணமாக, பெருமிதம் காரணமாக, நாம் ஒழுக்க வழியில் நிற்கிறோம். பாரதி,

*நிமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்*
*செம்மை மாதர் திறம் புவ தில்லையால்*

என்கிறார். தங்கள் அறிவு வழி நடந்த, செருக்கு சிறுமையைத் தவிர்க்க பெண்கள் செம்மையைக் காக்கிறார்கள் என்பார் பாரதி. அதுபோல, வள்ளுவர் பண்டைச் சமுதாய சூழ்நிலையிலேயே, பெண்கள் கற்புக்கு, ஒழுக்கத்திற்கு கட்டுப்பாடுகள் தேவையில்லை. அவை பயன்படவும் மாட்டா. தேவைப்படுவது 'நிறை'; அவர்கள் மனத்திண்மை. ஒழுக்கத்தில் இருக்கும் உண்மையான உறுதி என்கிறார். வள்ளுவர் கருத்து பெண்கள் கற்புக்கு மட்டுமன்றி, சமுதாயத்தில் ஒழுக்கம் முழுமைக்கும் பொருந்தும். நம்மை ஒழுக்கத்தில் வழி கட்டுப்படுத்துவது சட்டமன்று, நமது நிறை, நமது மனத்திண்மை. மாதற் கற்புக்கு வள்ளுவர் கூறும் கருத்து மற்றவர்கட்கும் பொருந்தும் மற்ற துறைகட்கும் பொருந்தும்.

# நினைக்கப்படும்

இயற்கையின் நிகழ்வுகள் சில விதிகட்குக் கட்டுப்பட்டவை. அதனால் தான் நாம் எங்கோ இருக்கும் சூரியனின், சூரிய கிரகணத்தைப் பல ஆண்டுகள் முன் கணக்கிட முடிகிறது. மனித சமுதாயம் எந்த இலக்கணத்திற்கும் உட்பட்டு வருவதில்லை. எந்தச் சூத்திரத்திற்கும் கட்டுப்படுவதில்லை. மனித வாழ்வும் அப்படிப்பட்டதே. காரண காரிய விளக்கங்கள் ஒரு அளவுக்கு மேல் தனி மனித வாழ்வில் பயன்படுவதில்லை. பொதுவாக நல்லவர்கள் என்று நாம் கருதுபவர்கள் வளமாக வாழ வேண்டும். இல்லாதவர்கள் வாழ்வு நலிய வேண்டும். ஆனால் நாம் அன்றாடம் காணும் காட்சி அப்படி இல்லை. நல்லவர்கள் வாழ்வில் பல இழப்புகள் ஏற்படுகின்றன; பல நலிவுகள் வருகின்றன. ஒழுக்கமில்லாதவர்கள் பலர், தீயவரே என்று உருகத்தக்கவர்கள் பலர் செல்வத்தோடு வாழ்கிறார்கள், பதவி பெறுகிறார்கள், பட்டம் பெறுகிறார்கள், பலரது பாராட்டும் பெறுகிறார்கள். இந்த முரண்பாடுகளை எப்படி விளக்குவது என்ற கேள்வி எழுகிறது.

பக்தர்கள் சிலர் இது தெய்வச் செயல் என்று கூறிவிடலாம். அதற்கு மேல், வாதிக்க இடம் இல்லை. அதையும் மீறி, அவருடைய செயல் ஏன் இப்படி அமைய வேண்டும் என்று கேட்டால், தொன்று தொட்டு அவர் நல்லவர்களைத் தான் சோதனை செய்வார் என்று கூறிவிடலாம். அல்லது இப்பொழுது நல்லவராக இருந்தாலும் அவர்கள் சென்ற பிறவியில் தீமைகள் செய்திருக்கலாம். அதன் பயனை இப்பொழுது அனுபவிக்கிறார்கள் என்று விளக்கம் கூறலாம். அதே போன்று, இப்பொழுது தீயவர்கள் வளமாக, வாய்ப்புகள் பல பெற்று வாழ்ந்தால், அது அவர்கள் சென்ற பிறவியில் செய்த நன்மையின் விளைவு என்று சமாதானம் கூறலாம். இப்படிப்பட்ட விளக்கம் எதையும் நாம் தவறு என்று நிரூபிக்க இயலாது, ஏற்கலாம்; ஏற்காது விடலாம். அவ்வாறு தான் இந்தச் சிக்கலான கேள்வியை வள்ளுவர் எழுப்புகிறார்.

*அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்*
*கேடும் நினைக்கப் படும்*

என்ற கேள்வியை எழுப்புகிறார். அதாவது பொறாமைமிக்கவர் சிலர் வளமோடு வாழுவதேன்; பொறாமையில்லாத செம்மைமிக்கவர்கள் நலிவது ஏன். இது அவர் ஐயம். அவர்முன் நிற்கும் கேள்விக்குறி, வள்ளுவர் கடவுள் நம்பிக்கையுடையவர்; ஆனால் கடவுள் மீது பாரத்தைப் போட அவர் விரும்பவில்லை, வள்ளுவரும் முற்பிறவியை நம்புகிறார்; விதியை நம்புகிறார். ஆனால் இது அவரது விதி என்று கூறி இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க அவர் விரும்பவில்லை. அவ்வளவு எளிதான விளக்கம் கொடுப்பதில் அவருக்குச் சமாதானமில்லை.

எனவே இந்த முரண்பாடு ‘நினைக்கப்படும்‘ என்கிறார். அதாவது ஆராயப்பட வேண்டும். இது, நமக்கு இதுவரை புரியாத புதிர் என்பதை நம்புகிறார். வள்ளுவரின் பெருமையை இங்கு காணலாம். எல்லாப் பிரச்சினைகட்கும் தீர்வு கண்டுவிட்டோம் என்ற மனநிலை அவருக்கு இல்லை. நாம் கடைப்பிடிக்கும் கடவுள் கொள்கை, முற்பிறப்பு, மறுபிறப்புப் பற்றிய நம்பிக்கை, இதனடிப்படையில் அமையும் விதி, அந்த விதியின் பயன் இவற்றாலும் விளக்க இயலாத சில சிக்கல்கள் இருக்கின்றன என்பதை ஏற்று, வள்ளுவர்:

*அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும், செவ்வியாள்*
*கேடும் நினைக்கப் படும்*

என்றார்.